திராவிடநாடு

28—6—59 | வார வெளியீடு | விலை 16 காசு

லீக்வான் யூ.

சிங்கபுரி வெற்றி

— பழநி —

ஓகோ! நகராட்சி மன்றத்தைக் கைப்பற்றி அங்கே அமர்ந்துவிட்டால் போதுமா? நாட்டையே ஆள்வது நாமன்ருே? நம்மிடந்தானே நகராட்சிகளை ஆட்டிப் படைக்கும் அதிகாரம் உள்ளது. எவ்வளவு தொல்லைகளைக் கொடுக்க முடியுமோ, அத்தனையும் செய்வோம்.

என்னப்பா! சிறுவர்கள் நிரம்பிய கட்சி எதைச் சாதிக்கும்? அழகாகப் பேசலாம். எழுதலாம், குரல் எழுப்பலாம். இதெல்லாம் வாலிபச் சேட்டைகள். இதை மதித்தா மக்கள் ஓட்டுப் போடுவார்கள்? பாருங்கள்! பெரிய தேர்தல் வரட்டும். மக்கள் மூக்கை அறுத்துவிடுவார்கள்.

அனுபவமில்லாதவர்கள் என்பதை இவர்கள், அதிகாரம் பண்ணும் நகரசபையே காட்டப்போகிறதா இல்லையா பாருங்கள்! ஆட்சி புரிவதென்ருல் சாமான்யமா? எத்தனையோ தேவைகள்! எத்தனையெத்தனையோ தொல்லைகள்! இதையெல்லாம் சமாளிக்கும் திறனேது இவர்களுக்கு?

சென்னைமா நகராட்சியில் அமர்ந்திருக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் குறித்து, இப்படியெல்லாம் கணக்குப் போடுகிறது காங்கிரஸ்.

நாடாளும் கட்சியென்பதால் தன் வசமிருக்கும் அதிகார பலத்தைக் கொண்டு நமக்கு முட்டுக்கட்டை போடும் என்று சிலரும், நமக்கு ஆட்சி புரிந்த பழக்கமில்லையென்பதைக் காட்டிப் பழிபோட்டுப் பலரும், தத்தம் எரிச்சலையும் அதிருப்தியையும் கொட்டி வருகின்றனர்.

இதே நிலைதான், இதழின் முகப்பில் காணப்படுபவருக்கும் ஏற்பட்டது! கடந்த ஆண்டு இவருடைய கட்சி, ஒரு நகராட்சி மன்றத்தில் அமர்ந்தது. அப்போது, நாட்டையாண்டது இன்னெரு கட்சி. புதிதாக அரும்பிய இக்கட்சிக்கு இவ்வளவு பெரிய வாய்ப்பா என்று ஆளும் கட்சி, தனது அம்புகளையெல்லாம், பூட்டியது. நகருக்கு இன்ன தேவை ஏற்பட்டுள்ளது, அரசாங்கம் உதவவேண்டும் என்று நகரசபைக் கவுன்சில் வேண்டுகோள் விடுக்கும்! நாடாளும் அரசு, அந்த வேண்டுகோளை மறுக்கும்! சரி நாங்களாவது ஏதாவது புதுவழி காண்கிருேம் என்று நகராட்சிமன்றம் முடிவெடுக்கும்! அதை வைத்து மக்களிடம் எரிச்சலை உண்டாக்கி, இம்முடிவை நாடாளும் கட்சி தடுக்கும்!! — இப்படி ஓராண்டுக்காலம், விடேன் தொடேன் என்று, சிங்கப்பூர் நகரை ஆண்ட பி. ஏ. பி. கட்சிக்கும், சிங்கப்பூர் தீவை ஆண்ட எஸ். ஏ. பி. எனும் கட்சிக்கும், பெரியதொரு போராட்டம் நடந்துகொண்டிருந்தது.

எஸ். ஏ. பி. கட்சியோ ஆளும் கட்சி! அதன் சார்பில் அமைச்சராக விளங்கிய லிம்யூகாக் என்பாரும் சாதாரணமானவரல்ல! சிங்கப்பூர் தீவுக்கு, வெள்ளையரிடமிருந்து விடுதலைபெற முயன்ருர் எனும் கீர்த்தி இவருக்குண்டு. நாட்டுக்குச் சுதந்திரம் வாங்க முயற்சித்த கட்சி, எனும் பெருமையும் இவருடைய கட்சிக்கு உண்டு. இந்த இரண்டும் போதாதா புதுக் கட்சியை நசுக்க!!

பாரீர்! பாரீர்!! எமது லிம்யூகாக், இலண்டனுடன் பேச்சு வார்த்தைகள் நடத்துகிருர்—பிரிட்டிஷ் பிரதமரிடமிருந்து நேற்று ஒரு கடிதம் வந்தது-நேருவைக்கூடப் புதுடில்லியில் பார்க்கவிருக்கிருர்—இப்படி ஒரு பக்கம், அவரைப்பற்றிய புகழுரைகளைக் குவித்துக்கொண்டிருந்தனர்.

என்ன முடியும்! இவர்களால் முடியாதென்பதை நாங்கள் காட்டுகிருேம்! நகரசபைக்கென மான்யம் கேட்டார்கள். நாங்கள் மறுத்துவிட்டோம். இது ஒரு கட்சியா? [illegible], என்ன சாதித்துவிட[illegible]ாகி[illegible]டுக்கு?-என்று, பி. ஏ. பி. கட்சியைப்பற்றி அவதூறுகளைப் பரப்பினர்.

ஆளும் கட்சியின் வசதிகள் எதிர்க் கட்சிகளுக்கு எப்படியிருக்கும்? என்ருலும்,இதோ இருப்பவரின் பி. ஏ. பி. கட்சி வாளா இருக்கவில்லை! தனது கட்சியின் முன்னணி வீரர்களைத் திரட்டியது! மூலைமுடுக்குகளிலெல்லாம் முகாமிட்டது! முட்டுக்கட்டை போடும் ஆளும் கட்சியின் தந்திரங்களையெல்லாம் அம்பலமாக்கும் பணியைத் தொடர்ந்து செய்துகொண்டிருந்தது! விடவில்லை! ஓயவில்லை! தினம் தினம், என்னென்ன வகையில் தங்கள்மீது பழிபோடச் சர்க்கார் சதி செய்கிருர்கள் என்பதையெல்லாம், தங்களுக்கு ஓட்டுப்போட்ட மக்கள் முன் சொல்லும் பணியை மட்டும் தொடர்ந்துசெய்துகொண்டே இருந்தார்கள்!!

பொதுத் தேர்தல் வந்தது. ஆளும் கட்சி, பூரிப்புடன் தோள்தட்டிக் கொண்டு கிளம்பிற்று.

வெள்ளையர்களிடமிருந்து விடுதலை பெறப் பாடுபட்டது எம் கட்சி என்றது, எஸ். ஏ. பி.

அதுசரிஐயா! அந்த வெள்ளையர்கள் பூரண சுதந்திரமா கொடுத்துவிட்டார்கள்? இராணுவமும், வெளிநாட்டு உறவையும் இன்னும் அவர்கள்தானே வைத்துக்கொண்டிருக்கிருர்கள்—என்று கேட்டது, பி. ஏ. பி.

லிம்யூகாக் எவ்வளவு பெரியவர் தெரியுமா?—என்றது ஆளும் கட்சி.

இருக்கட்டும்! மகிழ்ச்சி! அவரால், நமது சிங்கப்பூர் தீவின் கீர்த்தி என்ன உயர்ந்துவிட்டது?—என்றது எதிர்க் கட்சி!

எங்களையே இன்னெரு முறையும் ஆட்சியலமர்த்துவார்கள் மக்கள்;

(4-ம் பக்கம் பார்க்க)

துறையூர் மாநாடு

மலர் 17] ஆண்டுச் சந்தா ரூ. 8. (28–6–59) தனிப் பிரதி 16-காசு [இதழ் 50

செயலையும் சிந்தனையையும் அறிவியக்கத்துக் காக்கித் தொண்டாற்றிவரும் சீரிய நண்பர் சிற்றரசு தலைமையில், மலரும் செல்வன் மாறன், எம். ஏ. துவக்கிட, சென்றகிழமை சீரும் சிறப்புமாக நடந்திருக்கிறது, திருச்சி மாவட்ட தி. மு. க மாநாடு.

அம்பில் தர்மலிங்கம் தலைமையில் இயங்கும் அம் மாவட்டத்தின் அயராத தோழர்களைப்பற்றி நாடு அறியும். எனவே, அவர்கள் நடாத்திய இம்மாநாட்டின் சிறப்பினைப்பற்றிச் செப்பவா வேண்டும்!!

இலட்சக் கணக்கில் மக்களும், இலட்சிய முழக்கங்கள் பலவும், நாட்டின் நாடியினை விளக்கும் தரமும் நிரம்பி, இதுபோன்ற நமது மாநாடுகள் நடந்தாலும், நாட்டுக்குச் சொந்தமென்று கருதப்படும் வானொலியும் நாட்டின் குரலை எதிரொலிப்பதாக உலவும் ஏடுகளும், சாதிக்கும் மௌனம், உள்ளபடியே வருந்தக்கூடியதாகும்.

இருநூறு முந்நூறு பேர் கூடிக் கலந்திடும் ஏனைய மாநாடுகள் எனின், விளக்கம்தர வானொலியும், விவரித்துப்போட ஏடுகளும் பறக்கின்றன! நமது மாநாடுகள் என்றால், அலட்சியத்தையே பரிசாக வழங்குகின்றன!! இந்த அநீதி உள்ளத்தைத் துளைத்தாலும், ஒரு நாளைக்கு, இதே இடங்கள் நாம் சொல்வதென்ன என்பதைக் காத்திருந்து போடும் கட்டம் வரும் என்பதை உறுதியாகச் சொல்வோம்.

ஒளி தவழும் முகங்கள்! உயர்ந்த தோளுடைய உருவங்கள்! தாய்மார்கள் பலர்! தளிர்கள்! உழவர் பெருமக்கள்! உழைப்பாளிகள்! — அனைவரும் ஒரு விழாப்போல உலவிடும், இம்மாபெரும் பேறு, உலகிலேயே எந்த அரசியல் கட்சியும் பெறுததாகும். இந்தளவுக்கு நமது இயக்கமும், நாம் சொல்லி வரும் கொள்கையும் இன்றைய தினம் மக்கள் மன்றத்தில் இடம் பெற்றிருக்கின்ற மாட்சியின் அளவையும் வலிவையும் நன்றாக நாம் உணர்கிறோம்.

பற்பல பஞ்சாயத்துக்கள் நம் வசம்! பல நகர சபைகளிலே நம்மவர்! நமது மேயருக்கு ஜப்பானின் அழைப்பு! நமது சட்டமன்ற உறுப்பினர்களென்றால், மாற்றாரும் மகிழும் நிலை!—உண்மையில் பெருமைப் படத்தான் வேண்டும்.

இந்தப் பெருமையில், திருச்சிக்கு அதிகபங்கு உண்டு! தமிழகத்தின் இதயம் போன்ற அம்மாவட்டத்தில், நமது இதயங்களைக் கவரவும் தடவவுமான எண்ணற்ற தோழர்களுண்டு! அவர்கள் வளர்த்து வரும் திராவிடப்பண்ணையின் விளைச்சலைத் தமிழகமே அறியும்! ஆனால், ஒன்று. அப்படிப்பட்ட மாவட்டத்தில், கடந்த பொதுத் தேர்தலில், பெற்றதென்ன என்பதை இச்சமயத்தில், நாம் எண்ணிப்பாராமலிருக்கமுடியாது. எதிர்பார்த்த எத்தனையோ இடங்கள், நமக்கு வலிவுள்ள இடங்கள், நமக்குக் கிடைக்கவில்லை! என்ன காரணம்?—இதனை அறிவதிலும், அதனைப் போக்குவதிலும்தான், அம்மாவட்ட நண்பர்கள் எதிர்காலத்தில் முயலவேண்டும்.

போட்டால் பயிராகும் கழனிகளைப்போல உள்ள காளைகள் பலரைக் கண்டோம் மாநாட்டில்! குளிர்ச்சியான பார்வையையும், பசியைவிரட்டும் உணவையும் அவர்கள் நமக்குத் தந்தார்கள்; இந்த அன்பையும் பண்பையும் அந்த மாவட்டத்திலுள்ள மக்கள் யாவரும் நல்லதொருநிலைமையினை உண்டாக்கப் பயன்படுத்தவேண்டும், மாவட்ட நிர்வாகிகள். சேவையினைச் செம்மையாகச் செய்வதிலும், சிறைச்சாலை என்றால் பாடிவரும் சிட்டுக்களாகவும், அறப்போர் என்றால் அஞ்சாநெஞ்சுடன் ஈடுபடுவதிலும், எல்லாவற்றிற்கும் மேலாகக் கழகத்தில் வளர்ந்துவரும் குடும்பப் பாசத்தினைப் பேணிடவும் பெருமை பெற்ற அம்மாவட்டத் தோழர்களையும், மாநாட்டின் செயலாளர்களான, எம். பி. முத்துக்கருப்பன், எஸ். நெடுமாறன், பொருளாளர் எஸ். ஏ. ஜி. இராபி, தொண்டர்படைத்தலைவர்கள் கை. ஆறுமுகம், கோ. சிவபெருமாள் மற்றும் வீரர்களையும் வாழ்த்துகிறோம். பாராட்டுகிறோம். வளர்க, சகோதரத்துவம்! வருக நம் உரிமைத் திரு அகம்!! ❋

தமிழ் ஒலி

தமிழொலி கேட்கிறது, திருச்சியிலிருந்து! சென்ற சில நாட்களாகத் தமிழன்னையின் செல்வங்கள் பல, சிறைக்கோட்டம் சென்று வருகிறார்கள்!!

நண்பர் கே. ஏ. பி. விசுவநாதன் அவர்களும், டில்லி ஆதிக்கவெறியினை எதிர்த்துச் சிறை புகுந்திருக்கிறார். 'ஆகாஷ்வாணி' எனும் வேண்டாத சொல்லினை எதிர்த்துத்தமிழகம் கிளம்பவேண்டுமென்று, ஒலித்து வந்த விசுவநாதனார், தொண்டர்களுக்கு வழிகாட்டி போல், முன்னதாகவே சிறை சென்றுவிட்டார். சேனையை நடத்தும் தளபதியாக அவர் முன் வந்தமைக்காக மகிழ்கிறோம்; அதே சமயம் அவரது தமிழ்த்தொண்டுக்காகப் பொற்காப்புப்பூட்டவேண்டிய அரசு, அவரைக்கொண்டுபோய் இரும்புக்கம்பிகளுக்கு அப்பால் அடைத்து வைத்திருக்கும் கொடுங்கோன்மை கண்டு, தலை தாழ்த்துகிறோம். எத்தகைய அரசினைப் பெற்றிருக்கிறோம் என்பதற்காக இரங்குகிறோம்! என்று வருமோ நல்லாட்சி, என்று ஏங்குகிறோம்!!

வானொலி எனும் சொல், கூடாதெனக் கூறவில்லை, டில்லி. பொருளற்றது என்றும், மதியூக மந்திரிகள் சொன்னாரில்லை. எனினும், அச்சொல். ஆட்சி புரிய விரும்பினாரில்லை. விவேகமற்றதால் அல்ல, வேண்டுமென்றே செய்கிறார்கள். இந்த வேதனையைக் கண்டதால்தான், துறையூரில் நடைபெற்ற தி. மு. க. மாநாடு, இக்கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ள அனைவரையும் பாராட்டியிருக்கிறது. அதோடு,... தூய பணிக்கு வலிவளிக்கத் தயாராகயிருக்கும்படி தமிழ் மக்கள் அனைவரையும் கேட்டுக்கொண்டுமிருக்கிறது. இதன் பொருள், அறப்போருக்கு அனைவரும் தயாராவீர் என்பதுதான்! தமிழ் காக்க, ஆதிக்க வெறிபோக்க, திராவிட முன்னேற்றக் கழகம் அஞ்சாது என்பதைக் காட்ட அரிய தொரு சந்தர்ப்பம் விரைவில் வரவிருக்கிறது!!

வேண்டாத சொல்லை நுழைப்பதும், இந்திக்கு வேண்டுமென்றே ஆக்கமளிப்பதுமான, நெறியற்ற செயல், தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது. அமைச்சர்கள், தூய்மையாளர்கள்போல் பேசுகிறார்கள்; துணிந்து துரோகம்செய்கிறார்கள். காமராசருக்கு இந்தியை ஒதுங்கியிருக்கச் செய்யமுடியாது என்பதல்ல; எங்கே டில்லிப்பீடத்தின் தயவு போய்விடுமோ என்கிற அச்சத்தால் தமிழைக் காட்டிக் கொடுக்கவும் தயங்கவில்லை. இல்லையெனில், சாலையோரங்களிலும், இந்தி வருமா? கன்னித்தமிழ்ச் சாலையோரம் அந்நியமொழிக்கென்ன வேலை?—அடிக்கடி, நாம் எச்சரிக்கை விட்டுவந்தும், துறையூர் மாநாட்டில் கடைசி எச்சரிக்கை பிறந்திருக்கிறது. நேரு அரசு இதனையும் செவிடன் காதில் ஊதிய சங்காக மதிக்குமானால், தமிழகம் கடலாகும்! புயலாகும்! உறுதி! உறுதி!!

★

2-ம் பக்கத் தொடர்ச்சி

மக்களுக்கு எங்கள் கட்சியை விட்டால் வேறு நல்ல கட்சியில்லை— என்றது, எஸ். ஏ. பி. அதையும் பார்ப்போமே!— என்று, தேர்தல் களம் குதித்தது, பி. எ. பி. பண பலம் ஏது?—என்றது அது! தொண்டர் பலம் உண்டு என்றது இது!

மூன்று மாத காலம்!— இடைவிடாத தேர்தல் பிரச்சாரத்தில், இரு கட்சிகளும் ஈடுபட்டன.

விடுதலை அடைந்த சிங்கப்பூரின் வரலாற்றில் முக்கியமான தேர்தல் இது! எக்கட்சி வெற்றி பெற்றதோ, அதற்குத்தான் முதல் சுதந்திர அரசை நிறுவும் பெருமை கிடைக்கும்!! — அதனால், ஆளும் கட்சி, தனது சாகசங்கள் அவ்வளவையும் செய்து பலம் திரட்ட முயன்றது.

கட்டாய ஓட்டு முறை! எல்லோரும் கட்டாயமாக வாக்களிக்கவேண்டும்! எல்லோருக்கும் வாக்குரிமை உண்டு! — என்பதால், பி. எ. பி, ஆனந்தத்தோடு வேலை செய்தது. ஏனெனில், சிங்கப்பூரிலுள்ள ஏராளமான வாலிபர்களுக்கெல்லாம், இந்தக் கட்டாய ஓட்டு முறையால் ஓட்டுரிமை கிடைத்தது. அந்த ஓட்டுகளெல்லாம் தங்களுக்குக் கிடைக்கும் என்கிற நம்பிக்கையைப் பெற்றிருந்தது, பி. ஏ. பி.

தேர்தல் முடிவு தெரியட்டும்! திமிர் கொண்ட இவர்கள் கட்சி பூண்டற்றுப் போய்விடும். யார் இவர்களுக்கு ஓட்டுப்போட்டிருக்கப் போகிறார்கள்? ஆளப்போவது நாம்தான்!!—என்று, அகமகிழ்ந்திருந்தது, எஸ். ஏ. பி. தேர்தல் முடிவு வந்தது! எஸ். ஏ. பி. கட்சியின் முக்கியமானவர்களெல்லாம் தோற்றார்கள்! அதன் சார்பில் நிறுத்தப்பட்ட பலர் தோல்வி பெற்றார்கள்!!

உலகமே வியந்தது! வெளிநாட்டு ஏடுகள், இதுவரை அக்கரை காட்டாத ஏடுகள், இதென்ன கட்சி, இக்கட்சியின் தலைவர் யார், இந்தக் கட்சியின் சரித்திரம் என்ன, இதன் தலைவரின் படம் கிடைக்குமா, என்று தேடலாயின! அமெரிக்க ஏடுகள் முதல், சீனநாட்டு மக்கள் வரையில் ஒரே நாளில், அறிந்துகொள்ளவேண்டும் என்கிற ஆவலைப் பெற்றனர். தந்திகள் பறந்தன நிருபர்களிடமிருந்து. இத்தனை நாளும் செய்துவந்த இருட்டடிப்புக்கெல்லாம் ஒரே நாளில் பரிகாரம்தேடத் தொடங்கினர். அத்தகைய உன்னதமான பெருமையைப் பெற்றார், படத்திலிருக்கும், பி. ஏ, பி கட்சியின் தலைவர் லீ க்வான் யூ.

எவருக்கு ஆண்டு பழக்கமில்லை என்று பழிசுமத்தினரோ, அதே லீக்வான் யூதான், இன்றைய விடுதலை பெற்ற சிங்கப்பூரின் ஆட்சித் தலைவர். அவருடைய கட்சிதான், மூன்று கிழமைகளாக, சிங்கப்பூர் அரசினை நடத்துகிறது.

கடந்த ஆண்டு சிங்கப்பூர் நகரை ஆண்டது! இந்த ஆண்டு தீவையே ஆள்கிறது!!

இது ஒரு நல்ல படிப்பினையாகும், இங்குள்ள ஆளும் கட்சிக்கு. அதே சமயத்தில், நமக்கும் ஒரு நல்லதோர் சான்றாகும் இதன் வெற்றி.

நம்மைப்போல. வாலிபர்களைக் கொண்ட கட்சி இது! நம்மைப்போல, முற்போக்கு எண்ணங்களைக் கொண்ட கட்சிதான்!— அதையெல்லாம்விட நம்மைப்போல, ஆளும் கட்சியின் அயராத தொல்லைகளையும், ஏசலையும், அனுபவித்த கட்சி இது.

இன்று ஆள்கிறது! இதே கட்டம், நாளைக்கு, நமக்கு இங்கே வராது என்று யார் சொல்லமுடியும்!!

❀

அரசியல் பூங்கா

நாட்டிலே பலவித அரசியல் நிகழ்ச்சிகள் நடக்கின்றன. கிளர்ச்சிகளும் துவக்கப்பட்டிருக்கின்றன. ஆதிக்கத்திலிருக்கும் காங்கிரஸ் கட்சியின் கொள்கைகளும் நடைமுறைகளும் பெரிய சர்ச்சைக்குள்ளாக்கப்பட்டிருக்கின்றன. நில உடைமைப் பிரச்சினை தொழில் நடத்துவதிலும் வியாபாரத்தில் ஈடுபடுவதிலும் அரசாங்கம் மேற்கொண்டுவரும் வழிகளும் பெரும் பேச்சுக்கு இடம் தந்துள்ளன. முக்கியமாக விவசாயத் துறையில் கூட்டுப்பண்ணை முறையைப் புகுத்துவதற்குக் காங்கிரஸ் கட்சியினர் முடிவு செய்திருப்பது பல பெருந் தலைவர்களின் எரிச்சலுக்கு இடங் கொடுத்திருக்கிறது. அரசாங்கம் விவசாயத்தை ஊக்குவித்து உணவுப் பொருள்களின் விளைச்சலைப் பெருக்குவதற்கு எத்தனையோ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. ஆனால் உணவுப் பற்றாக்குறை நாட்டில் இருந்துகொண்டுதானிருக்கிறது!! குறிப்பாக நம் தமிழ் நாட்டில் போதுமான விளைச்சல் கிடைத்திருப்பதாகக் கூறப்பட்ட போதிலும், உணவுப் பொருள்களின் விலைவாசிகள் கூடுதலாகவே நிற்பதால், மக்கள் அவதியுறுகிறார்கள். உணவுப் பஞ்சம் வந்துவிட்டதாகவே கருதுகிறார்கள். இந்நிலை நீடித்தால் நாட்டில் குழப்பம் ஏற்படலாம். ஆகவே காங்கிரஸ் ஆட்சியின் போக்கை மாற்றாவிட்டால் பெரும் ஆபத்து விளையும் என்ற குரலை ஆச்சாரியார் அவர்கள் எழுப்பினார். அடிக்கடி எழுதினார். பல மேடைகளில் பேசினார். ஆனால் நேருவின் அரசாங்கம் காது கொடுக்கவில்லை. எனவே ஆச்சாரியார் புதியதொரு வெடியைப் போட்டார். அதாவது நாட்டில் எந்த அரசாங்கமாயிருந்தாலும் பொதுமக்களின் கருத்துக்கு மதிப்புக் கொடுக்காமல் தன்னுடைய மெஜாரிட்டி பலத்தைக் கொண்டு நெடுநாளைக்குப் பொது நலன்களைப்பாதிக்கக்கூடியகாரியங்களைச் செய்தால் மக்களிடையே அதிருப்தி ஏற்பட்டு மக்களாட்சி முறையில் நம்பிக்கையிழந்து, இராணுவ ஆட்சிக்கு இடம்கொடுக்கும் என்று வன்மையாகக் கூறமுற்பட்டார்! இராணுவத்தைப்பற்றி அவர் பேசியது எல்லோருக்கும் அதிர்ச்சியைக் கொடுத்தது. ஆச்சாரியாரைத் தவிர வேறுயார் பேசியிருந்தாலும் இராணுவத்தைத் தூண்டுகிறார் என்ற குற்றச் சாட்டின பேரில் அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுத்திருக்கக் கூடும். ஆனால் காங்கிரசில் பழம் பெருந்தலைவர்களில் ஒருவர், அதுவும் கவர்னர் ஜெனரல் என்ற உயர்ந்த பதவியை வகித்தவர்,

துறவி

அறிவாற்றலில் சிறந்தவர் என்று சொல்லப்படும் ஆச்சாரியாரே இப்படிப் பேசியது அரசாங்கத்துக்கு மிகவும் சங்கடத்தை உண்டு பண்ணியிருக்கக்கூடும். ஆனாலும் நேரு இதைப்பற்றித் தன்கருத்தை

> **துறவி!** எனும் பெயருக்குள் தன்னை மறைத்துக்கொண்டு, இதனை எழுதுபவர், உங்களுக்கெல்லாம் தெரிந்த ஒரு பழையவர். ஆச்சாரியாரின் கட்சி பற்றிய தனது சொந்தக் கருத்தை, நமக்கு அனுப்பியுள்ளார்.

வெளியிட்டபோது ஆச்சாரியார் போன்றவர்கள் இராணுவத்தைப் பற்றிப் பேசுவது விரும்பத்தக்கதல்ல, முறையல்ல, என்று இலகுவாகத் தன் கண்டனத்தைத் தெரிவித்துக் கொண்டார். ஆச்சாரியார் திடீரென்று, தன்மீது அன்பும் நம்பிக்கையும்கொண்டவர்களெல்லாம் தன்னுடைய காங்கிரஸ் எதிர்ப்புப் போக்குத்தங்களுக்குவருத்தத்தைக் கொடுப்பதாகத் தனக்குப் பலர் எழுதியிருப்பதாகக்கூறிக்கொண்டு, இனிச் சர்ச்சைக்குரியகாரியங்களில் ஈடுபடாமல் விலகிக் கொள்வதாக வெளியிட்டார். ஆச்சாரியார் கூறிய காரணம் முழுவதும் உண்மையென்று சொல்ல முடியாது போலிருக்கிறது. ஒருவேளை ஆச்சாரியார் இராணுவ ஆட்சியைப்பற்றிப்பேசியபேச்சுக்கள் சட்டத்துக்கு மீறிய குற்றமான செயல் என்று அரசாங்கம் அவருக்கு அந்தரங்கமாக எடுத்துக் காட்டியிருக்கக் கூடும். அதையொட்டி அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்காமலிருப்பதற்கான ஒரு வாய்ப்புக் கொடுக்கும் முறையில், தான்விலகுவதாக அறிக்கை வெளியிட்டிருக்கலாம் என்று எண்ணுவதற்கும் இடமிருக்கிறது!

அது எப்படியோ இருக்கட்டும்; ஆச்சாரியார் மீண்டும் போர்க் கொடி உயர்த்திவிட்டார். காங்கிரசார் கையாளும் முறைகளினால் யார் யார் பாதிக்கப்படுகிறார்களோ, அவர்களுடைய அதிருப்தியெல்லாம் திரட்டி உருவாக்கி காங்கிரஸ் கட்சிக்கு எதிராக ஒரு கட்சியை தோற்றுவிப்பதில் முனைந்திருக்கிறார். முன்பு காந்தியின் தீவிரக் கொள்கைகளையும், சட்டசபை 'பகிஷ்காரத்தை' விரும்பாதவர்களை எல்லாம் ஒன்று சேர்த்து வங்காளத் தலைவர் சி. ஆர். தாஸ் அவர்களின் தலைமையில் சுயராஜ்யக் கட்சியென்று ஒரு கட்சியை உண்டாக்கி, சட்டசபைகளைக் காங்கிரஸ்காரர் கைப்பற்ற முற்பட்டனர். அந்த முயற்சியை அந்தக் காலத்தில் மாறுதல் வேண்டாக் கொள்கையுடைய ஆச்சாரியார் போன்றவர்கள் எதிர்த்தனர். ஆனால் ஆச்சாரியாரே இப்பொழுது காங்கிரசுக்கு விரோதமாக "சுதந்திர" கட்சியென்று புதியதோர் அமைப்பை, காங்கிரஸ் போக்குப் பிடிக்காத பழைமை விரும்பிகளுக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்.

இந்தக் கட்சியின் வெற்றி தோல்வியைப்பற்றி ஒன்றும்சொல்வதற்கில்லை. ஆயினும் ஆச்சாரியாருக்கு எடுத்த எடுப்பில் ஒரு மகத்தான வெற்றி கிட்டியிருக்கிறது என்று சொல்லலாம். என்னவெனில் இந்தியாவைப் பொறுத்தமட்டிலும் நேரு அரசாங்கத்துக்கு எவ்வித எதிர்ப்பும்

(7-ம் பக்கம் பார்க்க)

சிங்-சிங் சிறைச்சாலை

மாண்மகிழன்

மாகியும் ஜிம்முவும் அன்புத் தம்பதிகள். ஏழைகள். ஒருவர்மேல் ஒருவருக்குக் காதல் கரைபுரளுகிறது. வரப்போகும் கிரிஸ்மஸ் பண்டிகைக்கு ஒருவர்க்கொருவர் பரிசு வழங்கத் தனித்தனியேமுடிவு செய்துகொள்ளுகிறார்கள்.

சிறுகச் சிறுக மீதம் செய்து, மாகி பணம் சேர்க்கிறாள். மறுநாள் பண்டிகை. சேர்த்து வைத்த பணத்தை எண்ணுகிறாள். பரிசு வாங்க அது போதியதாக இல்லை. வருத்தப்படுகிறாள். வழியொன்றும் புலப்படவில்லை. முடிவில்' ஒரு எண்ணம் வருகிறது. கடைத்தெருவுக்கு மகிழ்ச்சி பொங்கப் போகிறாள். அலைஅலையாய் அழகுவீசும் தன் நீண்ட பொன்னொளிர்க் கூந்தலை விற்கிறாள். அந்தப் பணத்தைக் கொண்டு மணாளனுக்குப் பண்டிகைப் பரிசாக ஒரு கடிகாரச் சங்கிலியை வாங்குகிறாள்.

வீட்டுக்கு வந்து, தன் மொட்டைத் தலையை பளிங்கில் துக்கத்தோடு பார்க்கிறாள். ஆளன் மனம் தன்னைக் கண்டால் எப்படி வாதையுறுமோ என்று ஏங்குகிறாள்.

அவன் வருகிறான். தன் 'இதயம்' கலங்கி இருப்பதைக்கண்டு இடிந்துவிடுகிறான். கண்கவில் நீர் பொங்கிவர அவள் தலையைப் பார்க்கிறான்.

மாகி, தன் மணியான குழலை அழித்துவிட்டமைக்குத் தன்னை மன்னித்துவிடும்படி கணவனிடம் மன்றாடுகிறாள்.

தான் வாங்கிவந்த கடிகாரச் சங்கிலியைக்கிரிஸ்மஸ் பரிசாக அவனுக்குப் புன்சிரிப்போடு தருகிறாள். கடிகாரச் சங்கிலியைப் பார்த்து அவன் திகைக்கிறான். பேசாமல் அதை வாங்கிக்கொள்கிறான்.

பிறகு, தான் காதலி மாகிக்கு வாங்கிவந்த பரிசை எடுக்கிறான். அவன் கரம் நடுங்குகிறது. அந்தப் பரிசு என்ன தெரியுமா? அவள் அலைகுழலுக்காக ஆணிப் பொன் சீப்பு. அவனுக்கு மட்டும் பணம் எப்படி வந்தது என்கிறீர்களா? அவனுடைய பழைய தங்கக் கடிகாரத்தை விற்றுத்தான்...

மொட்டைக்குச் சீப்பும், கடிகாரமில்லாதவனுக்குக் கடிகாரச்சங்கிலியும் என்ன உபயோகம்? இருவருடைய பரிசுகளும் இருவருக்குமே உபயோகமற்றுப்போயின.

ஆனாலும் அந்தக் காதல் நெஞ்சங்களின் அன்பின் மணிமுடி மின்னிற்று.

இந்தக் கதையை மூன்று ஆண்டுகளுக்கு முன் நான் படித்திருக்கிறேன். இன்னும் இதயத்தைவிட்டு அகலாமல் நிற்கிறது. ஆனால் அப்போது நான் ஆசிரியரின் பெயரைக் கவனிக்கவில்லை.

யார் அக்கதையின் ஆசிரியர் என்று அறிய எனக்கு ஆவல் மேலிட்டது.

நிறையக் கதைகளைப் படிக்கும் பழக்கமுள்ள நண்பன் ஒருவன் வந்தான். அவனிடம் "ஒரு சிறு கதை எப்படி இருக்கவேண்டும் என்று எண்ணுகிறாய்?" என்று கேட்டேன். அதற்கு அவன் மேற்குறிப்பிட்ட கதையைக் கூறி...இப்படித்தான் இருக்கவேண்டும் என்றான். உடனே நான் அக்கதையின் ஆசிரியர் பெயரைக் கேட்டேன். "உனக்கு இது கூடத் தெரியாதா? ஓஹென்றி என்று யார்வேண்டுமானாலும் சொல்லுவார்களே" என்று பதிலுரைத்தான்.

உடைபட்டுப்போன மூக்கை ஒட்டவைத்துக்கொண்டு ஓ-ஹென்றியின் கதைகளைப் படிக்க ஆரம்பித்தேன். அவருடைய கதைகள் எல்லாமே மனோகரமானவை, ஒவ்வொரு கதையும் படிப்பவரை பிரமிக்கச் செய்கின்றன. திடுக்கிடும் முடிவுகள் அவருடைய தனித் திறமை.

இன்று அவருடைய கதைகள் உலகெங்கும் உயிர்கொண்டு உலவுகின்றன. உலக மொழிகளிலெல்லாம் மொழிபெயர்க்கப்பட்டுவிட்டன. அவருடைய கதை மலர்கள் இலட்சக் கணக்கில் விற்பனையாகியுள்ளன.

உலகில் உள்ள பல்கலைக் கழகங்களிலெல்லாம் சிறுகதை இலக்கியத்தைப் புரிந்துகொள்ள அவரைத்தான் நாடுகின்றன. சிறுகதைகளைக் குறித்து இருக்கும் குழப்பமான பலவேறு அபிப்பிராயங்கள் எல்லாம், அவருடைய சிறுகதைகளைப் படிக்கும்போது அகன்றுவிடுகின்றன. ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு கதைப்பண்பை தெரிவித்துநிற்பதாகப் பல அறிஞர்கள் கூறுகிறார்கள். அவருடைய வார்த்தைப் பிரயோகத்தின் நுண்மையில் வியந்துவிடுகிறார்கள்.

நெஞ்சிலே நின்று நிலவச் செய்யும் கதைகளை எழுதி அழியாப் புகழ்பெற்றுவிட்ட ஓஹென்றி மிகச் சாமான்யராய் விளங்கியவர்தான்.

உயர்நிலைப் பள்ளிப் படிப்பே பின்னப்பட்டுவிட்டது. கல்லூரியில் அவர் நிழலுக்குக்கூட ஒதுங்கியதில்லை.

இளமையில் மிகவும் இன்னல் பட்டவர். சயரோகம் அவரை அரித்துக்கொண்டிருந்தது. பிழைக்கமாட்டார் என்று மருத்துவர்களே முடிவுகட்டிவிட்டார்களாம். பிறகு வடக்கு கரோலினாவுக்கு அவர் அனுப்பப்பட்டார். நோய் குணமாவதற்குச் சென்ற அவர், ஆடு மேய்க்கவேண்டியதாயிற்று. அந்த உத்தியோகத்தை, வயிற்றுத் துன்பம் அவருக்கு வாங்கித் தந்துவிட்டது.

பின்பு உடல் நலம் சரிப்பட்டு வந்ததும் டெக்சாசைச் சேர்ந்த **அஸ்டின்** என்னும் ஊரில் உள்ள பாங்க் ஒன்றில் அவருக்கு 'காஷியர்' வேலை கிடைத்தது.

அவசர நேரங்களில் தொகை தரும் பணியிலீடுபட்டிருப்பவர்கள். வாடிக்கைகாரர்களுக்குத் துரிதமாகப்பணம் எண்ணிவிடுவதற்கு ஒருவர்க்கொருவர் பணம் குறையும் போது உதவிக்கொள்வர். இதனால் ஹென்றி, பாங்க் பணத்தை எப்படியோ நழுவவிட்டுவிட்டார். மேலதிகாரி வந்து பார்வையிட்டபோது இது விளங்கிவிட்டது. ஹென்றி பீதிகொண்டார். பயனே இல்லாமல் போய்விட்டது. நீதிமன்றம் ஐந்தாண்டுகள் தண்டனையை வாங்கித் தந்துவிட்டது. இத்தனைக்கும் ஒரு சல்லிக்காசை

யும் அவர் பயன்படுத்திக்கொள்ள வில்லை. இது அவருக்குக் கெடுதல் தான். ஆனால் இலக்கிய உலகிற்கு ஒரு நல்லகாலம்.

சிறையிலேதான் ஹென்றி எழுதத் துவங்கினார். எழுதிய கதைகள் யாவிலும் உயிர் இருந்தது. சுவை தவழ்ந்தது. அவர் புகழ் மணம் அலைகடலைத் தாண்டியது. எண்ணற்றோர் இதயங்களில் அவருடைய கற்பனை ஊஞ்சல் ஆடிற்று.

இன்றும் கூட, அவர் ஆடு மேய்த்துக்கொண்டிருந்தாரே, அந்த இடத்தைப் பார்வையிட எண்ணற்றோர் புறப்பட்டுக்கொண்டே இருக்கிறார்கள்.

அவர் கைதியாக இருந்த 'சிங்—சிங்' சிறைச்சாலை எழுத்துக் கூடமாக மாறிவிட்டது. அங்குள்ள கைதிகள் எழுதுகிறார்கள், ஏனைய அதிகாரிகளும் எழுதத் துடிக்கிறார்கள். ஹென்றியின் சரிதத்தைப்பாடுவதற்கு அங்கே பல தூய உள்ளங்கள் உற்சாகத்தோடு கிளர்ந்தெழுந்துவிட்டன.

5-ம் பக்கத் தொடர்ச்சி

கிடையாது என்ற எண்ணம் உலகெங்கும் பரவியிருந்தது, ஆனால் இப்பொழுது நேருவுக்கு மகத்தான போட்டிகிளம்பியிருக்கிறது. அதை முன்னின்று நடத்துபவர் பெரிய மேதையான ஆச்சாரியாரே என்பதை உலகம் அறியும்படி நேருவே செய்துவிட்டார். இந்தப் புதிய கட்சியை நேருவே வரவேற்றிருப்பதுமக்களாட்சிமுறைக்குச்சரியான எதிர்க்கட்சி தேவையென்பதை பொதுமக்கள் உணரும்படி செய்துவிட்டது. ஆகவே காங்கிரஸ் கட்சிக்குள்ளிருப்பவர்கள் அதன் கொள்கைகள் பிடிக்காமல் வெளியேறுவதற்கு ஒரு வாய்ப்பும் மேடையும் இந்தச் சுதந்திரக் கட்சி அளிப்பதாகவும், நாட்டிலுள்ள பிற கட்சிகளில் நாட்டமில்லாதவர்கள் ஒன்று சேர்வதற்கும் இந்தக்கட்சி வழிவகை செய்யுமென்றும் நம்பப்படுகிறது.

எனவே, இப்புதிய கட்சி பற்றிய அபிப்பிராயம் எதுவும் தற்சமயம் வெளியிடுவதற்கில்லை. என்றாலும், காங்கிரசுக்கு இது ஒரு பேரிடி என்பதில் ஐயமில்லை.

★

மெக்சிகோ மேயர்

ஒளி

உலகில் சிறந்த அறிஞர்கள், விஞ்ஞானிகள், அரசியல்வாதிகள் மட்டும்தான் சரித்திரத்தில் இடம் பெற முடியுமென்பதில்லை. ஒரு நாட்டில் உள்ள ஒரு நகர மேயர் அந்நாட்டுச் சரித்திரத்திலேயே ஒரு ஒப்பற்ற இடத்தைப் பெற்றுள்ளார் என்றால், அவரைப்பற்றி அறிந்துகொள்ள ஆவல் எழுவது இயற்கை.

மெக்சிகோ நாட்டின் தலைநகரான மெக்சிகோவிற்கு ஏர்னெஸ்டோ உருசூர்டு என்பவர் ஆறு ஆண்டுகட்கு முன் மேயராக நியமிக்கப்பட்டார். அப்பதவியை, கவர்னர் ஜெனரல் என்றும் ரீஜண்டு என்றும் வழங்குவர். அவர் பதவி ஏற்றபோது அந் நகரின் நிலை மிகக் கேவலமாக இருந்தது. அமெரிக்கக் கண்டத்திலேயே பழம்பெரும் நகர் சிலவற்றுள் மெக்சிகோவும் ஒன்று. நியூயார்க் தரைமட்டமாக இருந்த காலத்து 60,000 வீடுகள் கொண்ட மாபெரும் நகராகத் திகழ்ந்தது மெக்சிகோ.

பல வகையிலும் அரியதொண்டுகள் புரிந்து குறுகிய காலத்தில் நகரை ஒரு இன்பபுரியாக்கிய பெருமை உருசூர்டு அவர்களைச் சாரும். அவர் செய்ததுதான் என்ன என்பதைப் பார்க்கலாம்.

பதவியேற்ற சில நாட்களில், ஓர் இரவு அவர் நகரை வலம் வந்தபோது, எண்ணற்ற மக்கள் நடைபாதையில் வசித்து வந்ததைக் கண்டார். மறுநாளே அதிகாரிகளைக் கூப்பிட்டார். நகரப் பிரமுகர்களை அழைத்தார். உருக்கமான வேண்டுகோள் விடுத்தார். பலன் கிட்டவில்லை. அடுத்து ஒரு முடிவிற்கு வந்தார். அந்நகரிலுள்ள எல்லாப் பொது விடுதிகளிலும் உள்ள அறைகளை வாடகைக்குப் பிடித்து அதில் குடியிருக்கச் செய்தார். அவ்விடுதிகளில் மிகச் சிறந்த "எல் பிராடோ" என்ற நவநாகரிக விடுதியும் ஒன்று. சீமான்கள் குடித்துவிட்டுக் கும்மாளம் போடும் இடமெல்லாம் நடைபாதை வாசிகளின் இல்லங்களாக மாறின. ஆனால் ஒரே இரவுதான்! மறுநாள் அந்நகர்ப் பிரமுகர்களெல்லாம் வெட்கித் தலைகுனிந்து மேயரைச் சந்தித்து ஒரு முடிவிற்கு வந்தனர். அதன்படி நடைபாதை வாசிகளுக்குப் பல விடுதிகள் எழுப்பப்பட்டன. இப்போது அங்கு நடைபாதை வாசிகளே கிடையாது.

அடுத்துச் சாலையோரங்களில் கடைவிரித்து வியாபாரிகள் போக்கு வரத்துக்கு இடைஞ்சல் செய்ததுடன், நகரின் சுகாதாரத்திற்கும் கேடு விளைவித்தனர். அவர்களையும் அவர் அணுகி வேறு இடம் ஒதுக்கித்தருவதாக வாக்களித்தார். ஆனால் அவர்கள் கேட்க மறுத்தனர். மறுநாள் புல்டோசரும், டிராக்டரும், நகர் மன்றஆட்கள்ஆயிரம் பேரும் கடப்பாறையுடன் வந்தனர். சாலைகள் அகலமாக்கப்பட்டு அழகுபடத் திகழ்ந்தன. வியாபாரிகளுக்கு வேறு இடங்கள் ஒதுக்கப்பட்டன.

பின் காய்கறி, பழம், இறைச்சி மார்க்கட்டுகள் மேயரின் கவனத்தை இழுத்தது. நோய்களுக்குப் பிறப்பிடமாய் மிகவும் அசுத்தமாகக் காணப்பட்ட அந்த இடங்களைச் சீர்படுத்த முயன்றார். அங்கும் "புல்டோசர்" தேவைப்பட்டது. இப்போது நவீன வசதிகளுடன் கூடிய முப்பது மார்க்கட்டுகள் கட்டப்பட்டுள்ளன. அங்கு காய்கறிகள் கழுவ, குளோரின் கலந்த தண்ணீர் இருக்கிறது. அழுகிப்போகாமல் பாதுகாக்க குளிர் அறைகள் உண்டு. அங்கு விற்பவர்கள் தூய ஆடைகள் அணிந்து, கைகளை அடிக்கடி கழுவிச் சுத்தமாக வைத்துக் கொள்ளவேண்டுமென்ற விதி உண்டு. மார்க்கட் தவிர, வேறு இடங்களில் காய்கறிகள் விற்கக் கூடாது. உலகிலேயே மிகப்பெரிய நவீன வசதிகளுடன் கூடிய சுத்தமான "மெர்சிட்" என்ற மார்க்கட்டை உருவாக்கிய பெருமை மேயர் உருசுர்டுக்கே!

போக்கு வரவுப் பிரச்சினையிலும் ஓர் அரிய சாதனையை நிலைநாட்டினார். எல்லாவற்றையும் குறுகிய காலத்தில் நிறைவேற்றும்ஆற்றல் உள்ளவராயிற்றே. ஒருநாள் காலை மேயர் நகர்வலம் வரும்போது காயும் வெயிலில் மக்கள் பஸ்ஸிற்காக வரிசையாக நின்றுகொண்டிருந்ததைக் கண்டார். மனம் வெதும்பினார். எப்போதும்போல் காரியத்தில் இறங்கினார். முதல் வேலை, பஸ் நிற்கும் இடங்களில் மக்கள் தங்கக் கூரைகள் போட்டார். மளமளவென்று அதிகமான பஸ்கள் ஓட முயற்சி எடுத்தார். ஆறு மாதங்களுக்குப்பின் 1500 புதிய பச்சை நிற பஸ்கள் ஓட ஆரம்பித்தன. அதுமட்டுமல்ல. புதிதாக 2000 டாக்சிகளுக்கு நகரில் ஓடும் உரிமை அளித்தார். பல டாக்சிகள் குறிப்பிட்ட இடங்களிடையே பஸ் மாதிரி ஓடுகின்றன. இப்போது நகரில்போக்குவரத்துப் பிரச்சினை வெற்றிகரமாகத் தீர்க்கப்பட்டுவிட்டது.

மேயர் ஒரு கண்டிப்பானவரும் ஆவார். நகரில் கண்ட இடங்களில் குப்பை போடுவர்களுக்குக் கடுமையான தண்டனை விதித்து, அதன் மூலம் கிடைத்த நிதியை அவ்வப்போது குப்பைகளை அகற்றுவதற்குப் பயன்படுத்தினார். நகரெங்கும் 20,000 மரங்கள் ஏற்படுத்தி எங்கும் பூங்காக்கள் மலரச் செய்து நகரை ஒரு சோலைவனமாகவும் ஆக்கி வருகிறார். நகர்ப் பூங்காக்களைச் சுத்தமாக வைத்துக்கொள்ளப் பொதுமக்களுக்கு விளம்பரங்கள் மூலம் அறிவுரை தந்துகொண்டிருக்கிறார். நகரிலுள்ள பஸ்களிலும் டாக்சிகளிலும் பின்வரும் விளம்பரங்கள் காணப்படும். "உங்கள் நகரை நீங்கள்தான் சுத்தமாகவைத்துக்கொள்ளவேண்டும்." என்ன நாகரிகமான விளம்பரம்!

இவையெல்லாவற்றையும் விட மிகப்பெரிய திட்டமொன்றைத் தீட்டி அதிலும் வெற்றி பெற்று மெக்சிகோ நகர் பாதாளத்திற்குப் போவதினின்றும் மீட்டார்! மெக்சிகோ நகரம் அமைந்துள்ள இடம் பழைய ஏரிக்கரை என்று நம்பப்படுகிறது. நகரின் அடித்தளம் களிமண்ணும் மணலும் கலந்திருப்பதால் அதில் ஈரப்பசை உள்ளவரை கெட்டியாக இருக்கிறது. நீர் வற்ற வற்றக் கட்டிடங்கள் கீழே இறங்குமாம். சாலைகள்கூடக் கீழே இறங்கிவிடுமாம். மெக்சிகோ நகருக்கு வேண்டிய தண்ணீர் முழுதும் சுமார் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட கிணறுகள் மூலம் கிடைக்கிறது. அவைகளைத் தடுத்து நிறுத்தினாலொழிய மெக்சிகோ நகரைக் காப்பாற்ற முடியாது என்பதை நிபுணர்கள் மூலம் உணர்ந்தார் மேயர். எப்போதும் போல் இதற்கும் ஒரு முடிவு காண விழைந்தார். நகரில் இருந்து எழுபது கல் தொலைவில் ஒரு சிற்றாறு ஓடுவதைக் கண்டார். உடனே மாபெரும் திட்டமொன்றைத் தீட்டி நான்கே ஆண்டுகளில் நகருக்கு வேண்டிய தண்ணீர் முழுதும் கொண்டுவர ஏற்பாடு செய்தார். நகரிலுள்ள கிணறுகள் அனைத்தும் மூடப்பட்டன. இப்போது நகர் பாதாளத்திற்குச் செல்வதினின்றும் தடுக்கப்பட்டது.

இவ்வளவு அரிய தொண்டினைச் செய்து புகழ்பெற்ற உருசுர்டு ஓர் ஆசிரியரின் பிள்ளை. இவருக்கு ஐம்பது வயதாகிறது. இவர் புகழ் எய்தியமைக்குக் காரணம் மூன்று. திறமை, சலியா உழைப்பு, நல்ல உள்ளம் இவைகள்தாம். எவ்வளவோ பெரிய பாலங்கள், பூங்காக்கள், சாலைகள் அமைத்தும் அவற்றில் ஒன்றிற்காவது தன் பெயரை இட அவர் இசைவு தரவில்லை. என்ன அடக்கம்! அதைப் பற்றி அவரைக் கேட்டதில், "என் பெயர் இருக்கவேண்டிய இடம் மக்களின் உள்ளம். பூங்காக்களில் தொங்கும் பலகைகளில் அல்ல," என்றார்.

நேர்மைக்கு மிகவும் கட்டுப்பட்டவர். அலுவலகத்திற்குள் நுழைந்துவிட்டால் அவருக்குத் தெரிந்தவர்களும் தெரியாதவர்களும் ஒன்றுதான். யாருக்கும் எந்தவித சலுகையும் காட்டமாட்டார். பண விஷயத்திலும் அப்படியே. எவ்வளவோ பணம் ஊழலால் விரயமாக்கப்படுவதைத் தடுத்திருக்கிறார். கடும் உழைப்பாளி. காலை எட்டு மணி முதல் இரவு பத்துமணி வரை ஓயாத உழைப்புத்தான். தினமும் நகரைச் சுற்றிப் பார்ப்பதற்கு இரண்டு மணி நேரம் ஒதுக்கி வைத்திருக்கிறார்.

மெக்சிகோ மக்கள் மிகவும் அலட்சிய மனப்பான்மை கொண்டவர்கள். கட்டுப்பாடாக நடந்து கொள்ளமாட்டார்கள். அப்படிப்பட்ட மக்களுள்ள நகரைத் திருத்துவது எளிதல்ல. அவரே சொல்கிறார், "மக்களுக்குத் தொண்டாற்ற, உள்ள உறுதியும் பொறுமையும் வேண்டும். தலைவன் நாணயமாகவும் கடமையுணர்ச்சியுடனும் நடப்பதை மட்டும் மக்கள் உணர்ந்துவிட்டால், பிறகு அந்தத் தலைவனை எப்போதும் கட்டுப்பாடோடு ஆதரிப்பார்கள். இன்னொன்றும் உண்டு. மக்கள் என் மேல் நம்பிக்கை வைக்க, வைக்க என் பொறுப்பும் அதிகமாகிறது."

முகவரி மாற்றம்

டாக்டர் சத்தியவாணிமுத்து,
எம். எல். ஏ.,
24-C, ஹைதரி தோட்டம்
கிருஷ்ணதாஸ் தெரு,
பெரம்பூர், சென்னை-12.

தொகுதி மக்களின் வசதியை முன்னிட்டு இப்புதிய முகவரிக்கு வந்திருப்பதால், கடிதம் எழுதுவோரும் பிறரும் இம்முகவரியோடு தொடர்பு வைத்துக் கொள்ளவும்.

எங்கும், எதிலும் இந்தி!

சென்ற இதழ் தொடர்ச்சி...

"தென்றமிழ் நாடாளும் வேந்தர்
செருவேட்டுப் புகன்றெழுந்து
மின்றவழு மிமய நெற்றியில் விளங்கு
விற்புலி கயல் பொறித்த நாள்
எம்போலு முடிமன்னர் ஈங்கில்லை
போலும்.

சிலப்—29—உரைப்;

என்றுரைத்த வடவேந்தர் கனக விசயன் கடுஞ்சொல் கேட்டு, வண்டமிழர் வீரம் கண்டு வையகத்து மன்னரெல்லாம் சிரம் தாழ்த்தி நிற்கையிலே, வரலாற்றுச் சுவடியிலே தனக்கென ஓர் நாடில்லா நாடோடிக்கூட்டத்தின் வழி வந்தோர் கூறிய சொல் பொறுக்காது, இமயத்தினின்றும் குமரியில் நீராட வந்த பாவிசைக்கும் குறு முனிவர் சேரத்து செங்குட்டுவனுக்குச் செய்தியைக் கூறினர்.

அவன் சினந்தெழுந்து "வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோளெங்கள் வெற்றித்தோள்கள், கறை படிந்த கூட்டத்துக் கயவர் கூறும் பழிப்புரையைச் சுமத்தல் நன்றோ!

இமயத் தாபதர் எமக்கீங் குணர்த்திய
அமையா வாழ்க்கை அரசர் வாய்
மொழி
நம்பா லொழிகுவ தாயி னங் கஃது
எம்போல் வேந்தர்க் கிகழ்ச்சியுந்
தருஉம்

(சிலப்—கால். வரி 9—12)

வீரத்து விளை நிலமே! மறவர்குல ஏறுகளே! காலத்துப் பகைவனையும் வெற்றி கண்ட கன்னித் தமிழ்த்தாயே! உங்களைத்தான் பழித்தார்கள்! அவர்கள் உங்களைத் தான் பழித்தார்கள்! உங்கள் மானந்தான் எங்கள் மானம். 'மயிர் நீப்பின் வாழாக் கவரிமான் அன்னார் உயிர் நீப்பர் மானம் வரின்' என்ற சிங்காரக்கீதமிசைக்கும் செந்தமிழர் மானம் போனபின் நாம் வாழ்ந்துதான் பயனென்ன? வையகம் இதுவரையில் கண்டிராத வரலாறு துவங்குகின்றது தமிழர்களே: துவங்குகின்றது! அன்று தொட்டுக் கறைபடியாத் தமிழினம், இன்று மட்டும் கறைபடியலாமா? போருக்குத் தயாராகுங்கள்; புகாரிலே பிறந்து கோவலனை மணந்து கொடுமைகள் பல பட்டுக் கொள்கைக்காக உயிர் துறந்த உத்தமிக்குச் சிலை அமைக்க,

வடதிசை மருங்கின் மன்னர்த முடித்
தலைக்
கடவு ளெழுதவோர் கற்கொண்டல்லது

(சிலப்—கால்—வரி, 13—14)

வறிது மீள்மாட்டேன்." என்று சூளுரைத்து ஆசானின் அறிவுரையைத் துச்சமெனத்தள்ளி, வாளையும், குடையையும் வடதிசை நோக்கி புறப்படச் செய்தான்.

சி. பெரியண்ணன்

போர்ப்பறை முழங்கின; அது கேளாத காளையர்க்கு, கேள்வியுற்ற வீரத் தாய்மார்கள்: "தூண் பிடித்துத் துவண்டிருக்கும் கண்மணியே! வானிடியும் முரசு ஒலி கேளாயோ நீ! வண்டமிழர் பரம்பரையை வகையற்றோர் இகழ்ச்சி செய்தார். வாளுங் குடையும் வடதிசை பெயர்ந்தது. வாடா என் கனிரசமே''' என்றழைத்துத் தலை சீவி பூ முடித்துக் கொல்லும் வேலைக்கையிலீந்து "வீரமென்ற சொல்லுக்கு விளக்கம் தந்த வீரர்களின்கோட்டாந்தான் தமிழகத்துப் பொன்னிலம். வெற்றியைத்தான் தழுவுவார்கள். தவறினால் தாள் பணிந்து மண்டியிட்டுத் தரணி மீது வாழமாட்டார்; மரணத்தின் வாயிலைத்தான் அடைவார்கள். தீரமாய்ச் சண்டையிட்டுப் புறங்காணாது மார்பைக் காட்டி வீரத்திற்கு இழுக்கு நேராது பார்த்துக் கொள். பொழுது புலரும் காலமாயிற்று; போடா என் கண்ணே!" என்று போகவிட்ட தாய்மார்கள் எத்தனையோ பேர்.

படைதிரண்டது; வடதிசை நோக்கி நடை இட்டது; நீலகிரி மலை கடந்து சேரன் செங்குட்டுவன் படையுடன் கங்கை நதி தீரத்தை அடைந்தான். அது சமயம் கன்னர் நூற்றுவர் வந்து, "தென்னகத்து மன்னவா! திசைநோக்கி உம் தாள் பணிந்திருந்தோம். தங்களை நேராகக் காணும் பேறு பெற்றமைக்குப் பெரிதும் பெருமைப்படுகிறோம். இறைப் பொருளெல்லாம் தயாராக இருக்கின்றன. மற்றேதாவது காரியங்கள் நடக்கவேண்டியிருந்தால் கூறுங்கள்; இனிது முடிக்கிறோம்." என்று துதித்து நின்றார்கள். உலகம் கண்டிராத உத்தமிஒருத்திக்குச் சிலை அமைக்க இமயத்தில் கல் எடுத்துப்போக மட்டுந்தான் சேரர் இங்கு வந்திருக்கிறார் என்றெண்ணிக் கன்னர் நூற்றுவர் "அரசே! தாங்கள் இங்கேயே தங்கியிருங்கள். இமயம் சென்று கல் கொண்டுவருகிறோம்" என்றுரைத்து நிற்க, சேரத்துச் செம்மல் "சிலை அமைக்க, கல் கொண்டு செல்லும் நோக்கமட்டுமன்று நான் இங்கு வந்திருப்பது.

பால குமரன் மக்கள் மற்றவர்
காவா நாவிற் கனகனும் விசயனும்
விருந்தின் மன்னர் தம்மொடுங்கூடி
அருந்தமிழாற்றல் அறிந்தில ராங்கெனக்
கூற்றங்கொண்டு இச்சேனை செல்வது

(சிலப், கால்—வரி. 156—162)

ஆகையால், நீங்கள் செல்வது தகுதியன்று. ஆனால் ஒன்று செய்யுங்கள்! இந் நதியைக் கடத்தற்குவேண்டிய கலங்களைத் தயார் படுத்திக் கொடுத்திடுங்கள்; அதுவே போதும்" என்றான்.

ஓடங்களைக்கொண்டுவந்து நிறுத்தினார்கள். அதன் மூலம் அக்கரையைச் சேர்ந்து பகைவர் நாடடைந்தான். பகைவர்களான உத்தரன், விசித்திரன், உருத்திரன், பைரவன், சித்திரன், சிங்கன், தனுத்திரன், சிவேதன் என்ற வடநாட்டுச்சிற்றரசரெல்லாம் கனக விசயரோடு சேர்ந்துகொண்டு 'தென் தமிழர் ஆற்றல்தான் பார்ப்போமே!' என்று கூறி எதிர்த்து வந்தார்கள். பசிவேட்கை அதிகப்பட, உணவுதேடி வேட்டைக்குப் புறப்பட்ட சிங்கம் யானைக் கூட்டத்தைக் கண்டு ஊக்கத்தோடு பாய்தல்போல, பகைவர் சேனையுடன் செங்குட்டுவன் போர்புரியத் தொடங்கினான். ஆரிய மன்னரெல்லாம் போரிலே தோற்று,

சடையினர் உடையினர் சாம்பற் பூச்சினர்
பீடிகைப் பீலிப் பெருகோன் பாளர்
பாடு பாணியர் பல்லியத் தோளினர்
ஆடுகூத்த ராகி யெங்கணும்
ஏந்துவா ளொழியத் தாந்துறைபோகிய
விச்சைக் கோலத்து வேண்டுவயிற்...

(சிலப். கால்—வரி. 225—230)

ஓட, அவர்களைத் தேடி அடிமைப்படுத்தி, ஆண்டவன் அவதாரமெடுத்து, துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம் செய்த வரலாறு காணாத வகையில், நம் சேரத்து ஏறு வெற்றிகண்டான். தேவாசுரப் போராட்டம் பதினெட்டாண்டிலும், இலங்கைவேந்தன் இராவணனுக்கும் இராமனுக்கும் நடந்த போர் பதினெட்டுத் திங்களிலும், பாண்டவர் கௌரவர் யுத்தம் பதினெட்டு நாட்களிலும், நடைபெற்றிருக்கிறது.

ஆனால் அஞ்சா நெஞ்சன் செங்குட்டுவனுக்கும், ஆரிய மன்னர் கனக விசயருக்கும் நடந்த அமர் பதினெட்டு நாழிகையில் நடந்திருக்கிறது. தமிழ் வீரன் வெற்றிமாலை சூடி,'அவதார புருஷர்' வெற்றிக்கு அவமானத்தை உண்டாக்கியிருக்கிறான். அமைச்சன் வில்லவன் கோதையையும், சேனையையும் ஏவிப் பனிமலையில் கண்ணகிக்குக் கல் எடுத்தான்.

“வடபே ரிமயத்து வான்றரு சிறப்பிற்
கடவுட் பத்தினிக் கற்கால் கொண்டபின்
சினவேள் முன்பிற் செருவெங் கோலத்துக்
கனக விசயர்தங் கதிர்முடி பேற்றிச்

(சிலப். நீர், வரி. 1—4)

கங்கையில் நீராடி வஞ்சியடைந்து கண்ணகிக்குச் சிலை அமைத்த வரலாற்றைப் படித்தேன்.

ஆத்திரத்தில் 'ஆ' என்று என் கையைப் பூமியின்மேல் அடித்திட்டேன். “என்ன அத்தான்! பைத்தியமா என்ன?” என்றாள் என் துணைவி. “ஒன்றுமில்லை” என்று சொல்லி, வெளியில்வந்து உலவிக்கொண்டே நிலைகுலைந்த தமிழினத்தைப்பற்றி எண்ணி எண்ணி வருந்தினேன்.

* * *

இறை தந்து தாள் பணிந்து வாழ்ந்து வந்த வடவருக்குத் தென்னகம் ஆண்டொன்றுக்கு அறுபது கோடி ரூபாய் வரியென்ற பெயரில் இறை தரும் செயல் சரிதானா? ஏன் இந்நிலை வந்தது? தமிழகத்துத் தார்வேந்தர் வடதேயத்தில் காலடி வைத்துவிட்டால் வடவேந்தர் தாள் பணிந்து மண்டியிட்ட காலமெல்லாம் எங்கே சென்றது? வடக்கு நோக்கி “ஆண்டவனே! ஆசிய ஜோதியே! அமைதியின் பிம்பமே! தங்கள் அடியார்களாகிய தியாகிகள்வேண்டிக் கொள்ளும் விண்ணப்பம், சென்னை மாநிலத்தில் சிகப்பும் கறுப்பும் கலந்த கொடிக்காரரின் அட்டகாசம் பொறுக்க முடியவில்லை. அன்று வாழ்ந்த மனிதருக்குத் தென்னிலங்கை அரக்கன் இராவணன் தந்த தொல்லையைப் போல் அல்லல் விளைத்து வருகின்றார்கள். அன்றவர்க்கு அண்ணல் இராமபிரான் ஆசிகூறி அரக்கர்களை அழித்ததுபோல், இன்று எங்களுக்கு நீங்களேதான் கதி. உங்களைத்தவிரத் துணைவேறில்லை. வாருங்கள்! வந்து பாருங்கள்! எங்களுக்கு ஆதரவு தாருங்கள்” என்று வரவேற்புத் தந்து வாய் பொத்தித் தலைவணங்கும் அடிவருடிகளை தமிழகம் ஏன் ஈன்றதோ?

அன்று வடபுலத்துக் கனகவிசயர் “......இமயநெற்றியில் விளங்கு விற்புலி பொறித்த நாள் எம் போலும் முடிமன்னர் ஈங்கில்லைப் போலும்.” என்றுரைத்ததற்கே, சிறிப்பாய்ந்து கல் சுமக்கவைத்தான் சேரன் செங்குட்டுவன். ஆனால் இன்று பண்பாடமைந்த செந்தமிழரைப் பார்த்து “நான் சென்ஸ்” என்று வசைமாரி பொழியும் நேருவுக்குப் பக்க சுருதி ஊதி, பண்பாட்டைக் கெடுத்துவரும் விபீஷணக் கூட்டங்கள் விளையாடும் விளையாட்டு மேடையாயிற்று வீரர்கள் விளைநிலம்.

தமிழைப் பழித்த தருக்கர்களின் தலைகளுக்குச் சிலைவடிக்கும் கல்லைப் பரிசாகத் தந்தார்கள் பார்புகழ்ந்த தென்றமிழ் நங்கை மக்கள். கவைக்குதவா இந்தியைச் சந்திலே புகுத்திவரும் வடவருக்குத் துணையாகத் தென்னகத்து அரசியலில் “அதுவும் வேண்டும்! அதுவும் வேண்டும்!” என்று வானளாவக் கத்திவரும் தவளைக் குணம் படைத்தவர்கள் நடமாடும் நாடாகி விட்டதே! காலமெனும் பாதையிலே தமிழினம் ஓடிவரும்போது கடந்து வந்த தூரத்தை மறந்து விட்டுக் களைப்பால் குந்திய இடத்தில் “இப்பக்கம் திருப்பினால்தான் களைப்பு நீங்கும்; காரியம் கைகூடும்; தூரம் குறையும்” என்று சொல்லும் எதிரியின் சொல்கேட்டுப் பாதைவிட்டுப் பாதை மாறக் காரணந்தான் என்ன? தூரம் காட்டும் பாதைக் கல்களில் பண்தமிழே கொஞ்சவேண்டிய நிலைமாறி, சந்தனத்தில் சாக்கடைச் சேற்றைக் கலந்ததுபோல், இந்தியைச் சேர்த்துவைத்திருத்தல் முறையா? தமிழ், கதிமாறிக் கலங்கும் நிலையைக் கண்டும் கன்னித்தமிழகத்து காளையர்கள் தென்னகத்து வீதிகளில் இந்திக்குச் சிந்துபாடி நடைபோடும் நாகரிகம் எந்தப் பண்பாட்டைச் சேர்ந்தது? பண்டைய தமிழன் கொடி பொறித்த இமயம் உயிர்பெற்று எழுந்தால் என்ன வென்று பேசும்? கன்னித் தமிழகத்துக் காவலர்கள் கடல் கடந்து சென்று வீரத்தால் தமிழ்ப்புகழை வளர்த்தார்கள். அவர்கள் கால் பட்ட மண்ணகம் கதை கூறும் நிலைபெற்றால் கைக்கொட்டிச் சிரித்துக் காறி உமிழாதா?

உங்கள் கண்ணில்படும் தொலைக் கல்லை (மைல் கல்லை) ஒரு முறை பார்த்துவிட்டு நலிவுபோக்க வழி நாடுங்கள். அருமைத் தமிழையும் தென்னகத் திருநாட்டையும், உண்ணச் சோறின்றி உருக்குலையும் திருவிடத்து மக்களையும்,அவர்கள் பண்பாட்டையும் காப்பாற்ற உங்களால்தான் முடியும். காலம் உங்களைத்தான் எதிர்நோக்கி இருக்கிறது. இதை நாடறியும்; நல்லோர் அறிவார்கள். எங்களின் அல்லல் தீரும் நாளெந்த நாளோ? அந்த நல்லதொரு நாளை எங்களுக்கு அர்ப்பணிக்க தமிழன்னை அறிவு தரட்டும்.

5

இரவு ஒருமணிக்கு மாப்பிள்ளை எங்கே என்ற பேச்சு மெல்ல எழுந்தது. பிறகுதான் முருகேச பிள்ளைக்குத் தன் பிள்ளை சாப்பிட்டானா இல்லையா என்ற சந்தேகம் வந்தது. தேடினர். எங்கெங்கோ தேடிக் கடைசியாக முத்துவின் அறைக்குள் நுழைந்தார். அங்கும் இல்லை. "எங்கும் காணவில்லையே'' என்று அலறி அடித்துக்கொண்டு . அவர் மனைவி ஓடி வந்தாள். ஒன்றுந் தோன்றாத நிலையில் உட்கார்ந்தார் முருகேசபிள்ளை. சிறிது நேரத்திற்கெல்லாம் வேலைக்காரன் ஓடிவந்து "சின்ன எசமானைத்தானே தேடறீங்க, அவரு இந்தக்கடுதாசியை உங்க ஊர்வலம் முடிஞ்சதும் கொடுக்கச் சொல்லித் தந்தாருங்கோ'' என்று நீட்டினான் ஒரு கடிதத்தை. வாங்கினார் அவசரமாகப் பிரித்தார். அதில்,

அன்புள்ள அப்பா,

எனது இந்த கடிதம் கண்டு நீங்களும் அம்மாவும் நிலைகுலைந்து போவீர் என்பது எனக்குத் தெரியும். தலைகுனியும்படி தங்களை வைத்துவிட்டேன் என்றெண்ணி வருந்தாதீர். இலைபோட்டு அதில் இட்ட சோற்றை உண்ண முடியாது போய்விட்டாற்போல் ஆயிற்று என்கதை. தங்களுக்கு மருமகள் தேவை என்ற ஆசையில் இந்தத் திருமண ஏற்பாட்டைத் தீவிரப்படுத்தினீர்கள். ஆனால் என் நண்பன் கண்ணனின் காதலியைத் தங்களுக்கு மருமகளாக...இல்லை......எனக்கு மனைவியாகத் தேடிவைத்திருக்கிறீர்கள் என்பதை அறியமாட்டீர்கள். தங்கள் ஆசையை நிறைவேற்ற எதையும் நான் செய்யத் தவறமாட்டேன். ஆனால் இதில் மட்டும் தவறவேண்டிய துர்ப்பாக்கிய நிலை எனக்கு ஏற்பட்டுவிட்டது. மன்னியுங்கள். திருமணச் சேதிகேட்டதும் சிலையாகிவிட்ட என் நண்பனையும், ஊர்வலத்தில் பொம்மையாக வீற்றிருந்த அவன் காதலி பூங்கோதையையும் பார்த்தேன். இவர்களைப் பிரித்துத் தங்கட்கு மருமகள் தேடித் தருவதைவிட நண்பனுக்குக் காதலியாகவே இருக்கட்டும் என்ற முடிவிற்கு வந்துவிட்டேன். உங்கட்கு மருமகள் வேண்டும். ஆனால் என் நண்பனுக்கு 'பூங்கோதைதான் வேண்டும்!

கண்ணன்—பூங்கோதை திருமணம் நடக்கவேண்டுமென்று நான் விரும்புகின்றேன். என்போன்றவனின் விருப்பம் ஈடேறாது என்று எனக்குத் தெரியும். ஆயினும் என் நண்பனுக்கு நான்செய்யும் உதவி ஒன்று உண்டென்றால், அது, பூங்கோதையை அவனிடமிருந்து நான் பிரிக்காமல் விட்டுவிடுவதுதான். எனவே விலகுகிறேன். தாய்நாடு விட்டு மேல்நாடு செல்கிறேன். உங்கள் ஆசியும் அன்பும் எனக்கு எப்பொழுதும் இருக்கும் என்று நம்புகிறேன். நான் திரும்பிவந்ததும் உங்கட்கு வேறு மருமகள் தேடித் தருகிறேன்.

இப்படிக்கு,

முத்து.

கடிதத்தைப் படித்தார். 'முத்து' என்று கதறியவாறே தலையில் அடித்துக்கொண்டு சோபாமீது சாய்ந்தார். 'அவ்வளவுதான். அவர் மனைவி ஆரம்பித்துவிட்டாள் 'ஒப்பாரி'யை. சிறிது நேரத்துக்கெல்லாம் சேதி கல்யாண மண்டபத்துக்கு எட்டியது. காதோடு [illegible] வைத்தாற்போல் பேச ஆரம்பித்தனர். ஆனால் சேதி வளர்ந்து பெருங் கூச்சலாகி எழும்பிக் குழப்பம் உண்டாகியது. சிங்காரவேலர் அவமானமும் ஆத்திரமும் தாளாமல் மகளையும்மனைவியையும் இழுத்துக்கொண்டு வேகமாகப் புறப்பட்டார் வீடுநோக்கி. பூகம்பத்தில் சிக்கியவர்போல் தடுமாறித் தடுமாறி வீடு சேர்ந்தார், சாய்ந்தார் கீழே! மூர்ச்சையானார். வைத்தியர் 'ஆபத்தில்லை' என்று கூறியபின்னர்தான் ஓய்ந்தனர்.

வீட்டை விட்டு வெளியேறிய முத்து வெளிநாடு கிளம்பினான் மேல் படிப்பிற்காக. அவன் மனதில் கவலை தோய்ந்த முகத்தோடு, ஏக்கம் நிறை பார்வையோடு பார்த்து நின்ற கண்ணம்மா நிலையான சிலையாக, கலையாத ஓவியமாக இடம் பெற்றாள். போகும் வழியிலேயே கண்ணம்மாவுக்குக் கடிதம் எழுதவேண்டுமென்ற ஆவல்கொண்டு தன் சிந்தையில் ஊறும் எண்ணங்களை எழுத்தாக்கி அனுப்பத் துடித்தான். ஆனால் துணிவு பெறவில்லை. ஆசையை அடக்கிக்கொண்டு பயணத்தை மேற்கொண்டான்.

முருகேச பிள்ளையும் அவர் மனைவியும் மகன்போன கவலையோடு காலங் கழிக்கவேண்டியவராயினர். சீமான் சிங்காரவேலர் அவமானத்தோடு வீட்டிலேயே அடைபட்டுக் கிடந்தார். உறவினர்கள் வீட்டு வைபவங்களில் கூட அவரோ அன்றி அவர் மனைவியோ கலந்து கொள்வதில்லை. அவரைப் பார்க்கும் கண்களெல்லாம் பரிகாசம் செய்வதாகவே அவருக்குத் தோன்றியது. பூவை பூங்கோதை கூண்டுக் கிளியானாள். துயரம் அவளைத் துரும்பாக்கியது. உணவை வெறுத்தாள். அவள் விழிகளை உறக்கம்வெறுத்து விலகி

விட்டது. பித்தம் பிடித்தவள்போல் நித்தம் தன்முகத்தைக் கண்ணீரால் கழுவி நாளை நகர்த்தி வந்தாள். பெற்றோரின் சுடுசொல்லோடு உற்றார்உறவுமுறையினரின் கேலிச் சொல் அவளைச்சுட்டு எரித்தது. தீப்புண்ணில் திராவகத்தை ஊற்றுவதுபோல் வந்தோரெல்லாம் வாரித் தெளித்தனர் அறிவுரை என்ற பேரால் கேலிச் சொற்களை. அவள் பேசாமடந்தை ஆனாள். ஆனால் அவள் விழிகள் பேசியவாறே இருந்தன!

மங்களம் தன் மகனோடு சென்னை சென்றாள் சிகிச்சைக்காக. கண்ணன் அலுவலக வேலை முடிந்ததும் வீட்டில் வந்து தன்னைத் தானே சிறை வைத்துக் கொண்டான். பழைய கடிதங்களைப் படிப்பதும் கண்ணீரால் அவைகளை நனைப்பதுமாக இருந்தான். பழைய சம்பவங்கள் அவன் நினைவிற்கு வரும்போதெல்லாம், சிறுகுழந்தை போல் கதறிக் கதறி அழுதான். உணவு குறைந்தது. உறக்கம் அதைவிடக் குறைந்தது. தனிமை அவன் தாகத்தை அதிகப்படுத்தியது. சுயநினைவிழந்து சிலைபோல் பலமணி நேரம் உட்கார்ந்து கிடப்பான். நாள் ஆக ஆக வீட்டில் கிடப்பதுபோல் அலுவலகத்திலும் சிலையாக உட்கார ஆரம்பித்தான். அவன் எழுதிய அலுவலகக் காகிதங்களிலெல்லாம் பூங்கோதை— பூங்கோதை' என்றே காணப்பட்டன. பலரும் கண்டித்தனர். கேலி பேசினர். எச்சரிக்கை செய்தனர். எதுவும் அவன் மனநிலையை மாற்றவில்லை. இறுதி எச்சரிக்கை செய்தனர். முடிவாக அவனுக்குப் பைத்தியம் என்று முடிவுகட்டி, அவன் உத்தியோகத்தைப் பறித்து விட்டனர். வீடடைந்தான் அந்த விசனம் தாங்கி. காகிதமும் பேனாவும் எடுத்துத் தன் தாயாருக்குக்கடிதம் எழுத விரும்பினான். தொடர்ந்து எழுதும்போது அது அவனையும் அறியாமல் காதல் கடிதமாக உருவெடுத்தது. பிறகு உணர்ந்தான் ... கிழித்தெறிந்தான்! மீண்டும் துவக்கினான். முடிவு பழையபடியே ஆனது. இப்படிப்பல கடிதங்களைக் கிழித்தெறிந்தான். ஏதோ வெறுப்புத் தட்டியது. வீசி எறிந்துவிட்டு வெளியே கிளம்பினான். கள்ளுக்கும் காதலுக்கும் குணத்தில் அதிக வேற்றுமை இல்லையே!!

பித்துப்பிடித்தவன் போல் எங்கெல்லாமோ சுற்றினான். வழியெல்லாம் அவனையும் அறியாமல் உளறியவாறே திரிந்தான். அவன் நிலைகண்டு சிலர் இரங்கினர். பலர் கேலி பேசினர். வேறு சிலர் வெறுப்புக்கொண்டனர். ஊர் வம்பு மடங்களிலெல்லாம் இந்தக் கேலி பேச்சுத்தான் இடம்பெற்றிருந்தது. எள்ளி நகையாடினர். ஏளனம் பேசினர். அதைத் தொடர்ந்து பல கட்டுக்கதைகள் கருதரித்தன. உருப்பெற்றுஅவைகள் உலவின. இதையறிந்த சிங்காரவேலரின் வேதனை வளர்ந்தது. அவமானம் தாங்கமுடியாது துடித்தார். இவருக்கு ஆரூடம் கூறுவதும்ஆறுதல் சொல்லுவதும் தன் நித்திய தொழிலெனக்கொண்டார் சாஸ்திரியார். சாஸ்திரியாரின் சாமாதான சொல்கேட்டுத்திருப்தி ஏற்படாவிட்டாலும், வேறு வழியில்லாத காரணத்தால் கேட்டு வந்தார் சிங்காரவேலர். நாட்கள் நகர்ந்து மாதங்களாகி, மாதங்கள் கூடி ஆண்டு இரண்டு உருண்டு ஓடிமறைந்தது.

வரகூர்என்ற சிற்றூரின் மிட்டாதார் பட்டுலிங்கம் பிள்ளை அறுபதாங் கல்யாணம் செய்துகொள்ள ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போதே மனைவியை இழந்தார். மனைவி மாண்டதுகூட அவரை அவ்வளவு வாட்டவில்லை. மாண்டவள் தன்குடும்பத்திற்காகப் பெற்றுவைத்த குலவிளக்கைக் காணும்போதெல்லாம் வாட்டம் மிகுதிகொண்டார். பெயரோ திருஞானம்! வயது இருபது! ஆனால் அரைப் பைத்தியம்! பிள்ளை குணமாகவேண்டும் என்று அவர் கும்பிடாத கோயில் இல்லை. நடத்தாத திருவிழா இல்லை.

விரதம் இருந்து பார்த்தார்! காணிக்கை செலுத்திப் பார்த்தார்! பலனில்லை. காவடி தூக்கினார் பழனிக்கு! குறுந்தடி ஏந்தி நிற்கும் அந்தக் கோவணாண்டி, தன் குல விளக்கைக் குணப்படுத்துவான் என்று நம்பினார்! அவனும் கைவிட்டான்! புரட்டாசி மாதம் வந்தது. புறப்பட்டார் ஏழுமலையான் கோயில் நோக்கி; நெடியோன் அடி பணிந்தார். ஆனால் பலனில்லை. காசி சென்று கங்கையில் தன் பிள்ளையோடு நீராடினார். பைத்தியத்தின் சேட்டைகள் அதிகரித்ததேயொழியக் குறையவில்லை.என் செய்வார்! வைத்தியர்—ஜோஸ்யர் இவர்கள் சொன்ன முறையெல்லாம் முயற்சித்து முடியாது போகவே அலுத்துப்போய்விட்டார்—தன் பிள்ளையைக் காணும்போதெல்லாம் துடித்தார். அவரின் திருக்குமாரனின் சேட்டைகள் நிதம் வளர்ந்தது. போகிறவர்கள் வருகிறவர்களைத் குறும்புத்தனம் செய்கிறான் என்ற குற்றச் சாட்டுகள் குறைந்து, பெண்களிடம் போக்கிரித்தனம் செய்கிறான் என்ற சேதிகள் தொடர்ந்து வந்தன. கேள்வியுற்ற பட்டுலிங்கம் பிள்ளையின்வேதனை அதிகரித்தது. என்ன செய்வதென்று தெரியாது திகைத்திருக்கும் வேளையில் சாஸ்திரியார் வந்தார். மிராசுதாரரின் மனவேதனையை நன்கறிந்திருந்த சாஸ்திரியார் தன் நாவன்மையைக் காட்டினார். துணைக்குச் சந்திரனையும், சூரியனையும் குருவையும் கேதுவையும் அழைத்தார். சாட்சிக்குச் சாஸ்திரங்களைக் காட்டினார். பையனின் புத்தி சுவாதீனமின்மைக்குக் காரணம் குருபுத்தியின் கொடுமைதான்' என்றும்,குருபுத்தி நீங்கும் காலம் நெருங்கிவிட்டதென்றும் கூறி, ஆறுதல் செய்து வீட்டுக்கு ஒரு மருமகள் வந்தால் எல்லாம் சரியாகிப் போய்விடுமென்றும் கூறினார். இதைக் கேட்டதும் பட்டுலிங்கம் பிள்ளை, கேலிக்குத்தான் சாஸ்திரியார் இப்படிச்சொல்லுகிறாரோ என்று எண்ணினார்—மறுத்தார். சாஸ்திரியாரா விடுவார்? முயற்சியுடையோர் இகழ்ச்சி அடையார் எனும் முதுமொழியை அறியாதவரா என்ன? இடைவெளி இரண்டு நாள் தந்தார். மீண்டும் பழைய பாட்டையே புது மெருகிட்டுப் பாடினார். மிராசுதார் இம்முறையும் மறுத்தார் என்றாலும் 'சுரம்' குறைந்திருப்பதைக் கண்டார். சாஸ்திரியார் முயற்சியை விடவில்லை. வெற்றியின் வாடை தென்பட்டது. "ஒரு பெண்ணின் வாழ்க்கையைக்கெடுக்கக்கூடாது" என்று பேசின மிராசுதார் "யார் பெண் கொடுப்பார்கள்" என்ற கேள்வியை எழுப்பினார்.

அவ்வளவுதான்! சாஸ்திரியாரின் பேச்சுத் திறனால் திருமணம் செய்துவிடுவதென்ற எண்ணத்தை ஆழப் பதியவைத்துவிட்டார். அத்துடன் தான் தேடியிருக்கும் பெண்ணின் பெருமைகளைச்சொல்லி,அழகை வர்ணித்து அந்த வரலட்சுமியின் பெயர் செளபாக்கியவதி 'பூங்கோதை' என்றார்! சகல ஏற்பாடுகளோடு திரும்பி வருவதாகச் சொல்லி விடைபெற்றார்!!

(தொடரும்)

இவர்கள் பேசினல்....!

மூன்று மாதச் சுற்றுப்பயணம்— அதுமுடிவுறும் நேரத்தில் இந்தத் துக்ககரமான செய்தியா என் காதில் விழவேண்டும்!

சுற்றுப்பயணம் துவங்கியதற்கே காரணங்கள் பலவுண்டு. ஆனல், நான் எதற்காகப் பயந்தேனே, எது நடக்கக் கூடாது என்று கருதினேனே, அதுநடந்துவிட்டது — இந்தோனேஷிய நாட்டின் தனிப்பெருந் தலைவனுக, எதிர்ப்பொன்றும் இருந்திடாமல், கொலுவீற்றிருக்கவேண்டும் என்ற என் எண்ணத்தில் — ஆசையில், கடைசியில் மண்விழுந்துவிட்டது.

தாயகத்தை மாற்ருர்தம் பிடியிலிருந்து மீட்க, ஏறக்குறைய 30- ஆண்டுகள் போராடியிருக்கிறேன் —படாதபாடு பட்டிருக்கிறேன் — உயிரைத் துச்சமென மதித்துப் பற்பல துணிச்சலான செயல்களிலே ஈடுபட்டிருக்கிறேன்—அரசியல் தந்திரங்களைக் கையாண்டு, வாய்ப்பு ஏற்பட்டபோது ஐப்பானியரோடு நெருங்கிய தொடர்பு கொண்டு, இந்தோனேஷியாவின் விடுதலைக்கு அடிகோலியிருக்கிறேன்.

இவ்வளவும் செய்ததாலே என் மீது என்நாட்டு மக்களுக்கு அளவிட முடியாத பாசம்—அசைக்க முடியாத நம்பிக்கை!

இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி வரலாற்றில் சிறப்பானதோர் இடத்தைப் பெற, நான் துடித்தவண்ணம் இருக்கின்றேன்.

ஆனல், என் மனக்கோட்டை' நாளுக்கு நாள், கொஞ்சம் கொஞ்சமாக இடிந்து வருகின்றது.

1945-ல் நாடு விடுதலை பெற்றது முதல் நானும் என்னலானவரை முயன்று வருகின்றேன், புதியதோர் அரசியலமைப்பை இங்கே புகுத்த!

பலமான பிரச்சாரத்தை எவ்வளவோ எதிர்ப்புக்கும் ஏளனத்துக்குமிடையே செய்துவந்திருக்கிறேன்.

> *இந்தோனேஷிய ஜனதிபதி சுகர்ணே சுற்றுப்பயணம் செய்துகொண்டிருக்கிருர். அவர் தயாரித்த அரசியலமைப்பை ஏற்றுக்கொள்ள அந்தநாட்டுப்பாராளுமன்றம் மறுத்துவிட்டது. அதன் பயனுகப் படைத் தலைவர் நாசூஷன் அரசியல் நடவடிக்கைகள் அனைத்துக்கும் தடைவிதித்திருக்கிருர். இவை பற்றி........*

அதன் பிறகுதான் அந்த அரசியலமைப்பைப் பாராளுமன்றத்திற்குக் கொண்டுவர ஏற்பாடுகளைச் செய்தேன்.

M. S. வெங்கடாசலம், M. A.,

பாராளுமன்றத்தில் அரசியலமைப்புப்பற்றிய விவாதம் அண்மையிலே நடைபெற்றபோது நான் சுற்றுப் பயணம் செய்துகொண்டிருந்தேன்—உண்மைதான்.

ஆனல், அங்ஙனம் சுற்றுப் பயணம் செய்யாமல் சொந்த நாட்டிலேயே இருந்திருந்தால், என் சட்டம் தோற்கடிக்கப்பட்ட நிகழ்ச்சி, எனக்கு எவ்வளவு பெரிய அவமானமாக, என் வாழ்க்கையில் துடைத்தெறியப்பட முடியாததோர் கறையாக அமைந்திருக்கும் என்று எண்ணும்போது, நான் சுற்றுப் பயணம் செய்துகொண்டிருந்ததுதான் சரி என்று என்னை நானே தேற்றிக் கொள்கிறேன்.

ஆனல், அதே சமயத்தில் ஒரு சபலம்! ஒருசமயம் நான் ஊரில் இருந்திருந்தால் எனது அரசியலமைப்பு ஏற்கப்பட்டிருக்கக் கூடுமோ, என்ற ஒரு நப்பாசை! காலம் கடந்ததுதான்! ஆனல் என்பேதை மனம் அப்படியெல்லாம் எண்ணத் தூண்டுகிறது!

சுற்றுப்பயணம் புறப்படுவதற்கு முன், முதலமைச்சர் ஜூவாண்டாவிடமும் மற்றவர்களிடமும் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டு, வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டுத்தான் புறப்பட்டேன்.

ஆனல், சொல்லிக்கொடுத்ததை' அரசியல் தந்திரங்களைக் கையாண்டு திறம்பட முதலமைச்சர் செய்து முடிக்காததாலேதான் இப்படிப்பட்டதோர் இக்கட்டான நிலை இன்று ஏற்பட்டு இருக்கின்றது.

என்னுடைய திட்டத்தை ஆதரித்து ஏறக்குறைய 60 பேர், இடியென முழங்கியிருக்கிருர்கள் பாராளுமன்றத்தில்—எவர் மனத்தையும் மாற்றக்கூடிய அளவிலே

பேசியிருக்கிறார்கள். அப்படிப் பட்டவர்களெல்லாம் இருக்கின்ற அதே பாராளுமன்றத்தில் என் சட்டம் தோற்றிருக்கிறதென்றால், அவர்களையெல்லாம் ஒன்றுகூட்டி, போடவேண்டிய சில எலும்புத் துண்டுகளைப் போட்டு, எடுத்த காரியத்தினை முடிக்கின்ற திறன் முதலமைச்சருக்கு இல்லையென்பதைத் தவிர வேறென்னகாரணம் கூறமுடியும்?

என் அரசியலமைப்பிலோ — அதன்மூலம்நான்நாட்டில் அமைக்க விரும்புகின்ற புதுமாதிரி ஜனநாயகத்திலோ — எவரும் குறை காணமுடியாது என்று நான் திடமாக நம்புகிறேன்.

முழு ஜனநாயகத்திலே எனக்கு நம்பிக்கை எப்போதுமே இருந்ததில்லை—இன்றும் இருக்கவில்லை.

"எழுத்துரிமை, பேச்சுரிமை போன்ற உரிமைகளின் அடிப்படையிலே அமைக்கப்பட்ட ஜனநாயகம், தனிப்பட்ட மனிதர்களின் நன்மைகளுக்கும், கும்பல்களின் நன்மைக்கும்தான் பயன்படும் என்று நான் திடமாக நம்புகிறேன் என்று இரண்டாண்டுகளுக்கு முன்னலேயே கூறியிருக்கிறேன்."

அன்றிலிருந்து இன்றுவரை அதையேதான் சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

இந்தக் கருத்திலே என்ன குறை? என் திட்டத்திலே என்ன தவறு?

இந்தியாவிலேகூட ஜெயப்பிரகாஷ் நாராயணன் இதைத்தான் சொல்லிவருகிறார். கட்சி அரசியல் நாட்டுக்கு நன்மை தராது என்று திட்டவட்டமாகக் கூறுகிறார். நான் அமைத்திருப்பதைப்போன்று அமைச்சரவை — நிபுணர்களைக் கொண்டதொரு அமைப்பு—நாட்டுக்கு நன்மைதரக்கூடியது என்கிறார்.

நேருவுக்குப் பிறகு யார் என்ற கேள்விக்கு அவரைக் காட்டுகிறார்கள் சிலர், அந்த நாட்டில்.

அப்படிப்பட்ட பெரியவரே எனது திட்டத்தைப்போன்றதொரு திட்டத்தை எடுத்துக்கூறி, அவரது நாட்டில் ஆதரவு திரட்டி வருகிறாரெனில், எனக்கு இதனினும் தெம்பு ஊட்டக்கூடியது வேறென்ன?

இவ்வளவு உயர்ந்த தத்துவத்தின் அடிப்படையிலே அமைக்கப்பட்ட அரசியலமைப்புதான் பாராளுமன்றத்திலே வைக்கப்பட்டது.

அது தோற்றதென்றால், முதலமைச்சரின் திறமைக்குறைவைத் தவிர, வேறு எதைக் காரணமாகக் கொள்ளமுடியும்?

என் திட்டம் தோற்றதிலேகூட எனக்கு அவ்வளவாக வருத்தமில்லை. **ஆனால், அதன் பயனாக நாட்டில் எந்தக் கட்சியும் பொதுக்கூட்டமோ, விவாதங்களோ, ஊர்வலங்களோ, நடத்தக்கூடாது என்று படைத்தலைவன் நாசூஷன் அறிக்கை விடுத்திருப்பதைப் பார்க்கும் போதுதான் எனக்கு அச்சமாக இருக்கின்றது — முடிவு என்ன ஆகும் என்று எனக்கே புரியவில்லை.**

அதனால்தான், இன்னமும் சுற்றுப் பயணம் செய்துகொண்டிருக்கிறேன் — நாடு திரும்பவில்லை — காலம் கனியும் என்ற நம்பிக்கையில்!

நாசூஷன்

ஜனநாயகமாம்— அதிலே இது புதுமாதிரியாம்—நாடு அதை ஏற்க வேண்டுமாம்! என்ன வேடிக்கை இது!

நாடு விடுதலை பெற்றதிலிருந்து இன்றுவரை ஜனநாயக முறையில் தான் இந்த நாட்டு அரசியல் நடைபெற்று வந்தது!

ஆனால் பலன்? நாடு எந்த வகையிலே முன்னேறியிருக்கிறது?

"என் நாடு பின் தங்கிய நாடு என்று சொல்லிக்கொள்வதை நான் விரும்பவில்லை" என்று சென்ற வாரம்கூட இந்த நாட்டு ஜனாதிபதி **சுகர்னோ** கூறிடும் நிலையில்தான் இருக்கிறது!

பின் தங்கியது என்பதை அவர் மறுக்கவில்லை— ஏற்றுக்கொள்ளவும் விரும்பவில்லை. —அவ்வளவுதான்!

ஆனால், நேற்று ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற அயூப்கான் பாகிஸ்தானத்திலே எவ்வளவு நன்மைகளைச் செய்திருக்கிறார்! பர்மாவின் ஆட்சிப் பொறுப்பிலேயிருக்கிற ஜெனரல் நீ வின் எவ்வளவு சீர்திருத்தங்களைச் செய்திருக்கிறார்!

இங்ஙனமிருக்க இன்னமும் ஜனநாயகம் ஜனநாயகம் என்று நாம் பேசிக்கொண்டிருப்பதிலே பொருளென்ன?

ஒன்று ஜனநாயகம் இருக்க வேண்டும்— அல்லது சர்வாதிகாரம் இருக்கவேண்டும்.

இரண்டும் கெட்டான் நிலையில் புது மாதிரி ஜனநாயகத்தை இங்கே அமைக்க முயலுவதிலே பொருளென்ன?

இந்தியாவில் அப்படித்தான் "சமதர்மப்பாணி"யிலே சமு

தோழர்களுக்கு

பல நகராட்சி மன்றங்களிலும், கழகச் சார்பில் வெற்றி பெற்றிருக்கிறார்கள், நமது தோழர்கள்.

சிற்றூர், பேரூர் உள்ளாட்சி மன்றங்களிலும், இடம் பெற்றிருக்கிறார்கள் நமது கழகத்தவர்கள்.

அவர்களை மக்கள் மன்றத்துக்கு அறிமுகப்படுத்த விரும்புகிறது, 'திராவிட நாடு'.

இரண்டு மூன்று இதழ்களுக்குப் பின், துவங்கும், புத்தாண்டில், இப்பணியைச் செய்யவிருக்கிறது, 'திராவிட நாடு'.

எனவே, வெற்றி பெற்று இப்போது அமர்ந்துள்ள தோழர்கள், தங்களது புகைப்படங்களை **"ஹோம்லண்ட்" நுங்கம்பாக்கம் சென்னை-6** என்ற முகவரிக்கு அனுப்பியுதவ வேண்டுகிறோம்.

'க்ரூப்'பாகயிருந்தால் நல்லது. வெற்றி பெற்றவர்கள் சிரமம் பாராது ஒத்துழைப்பார்களென எதிர்பார்க்கிறோம்.

தாயத்தை அமைப்பதாகப் பறை சாற்றி வருகிருர்களாம்!

இவர்களுக்கெல்லாம் ஏனிந்த 'வெளவால்' தன்மை?

இந்த நிலையினை மாற்றியமைக்கத்தான் அரசியல் கட்சிகளைக் கட்டுப்படுத்தியிருக்கிறேன்— சட்டத்தின் மூலம்!

1952ல் சாதிக்க முடியாததை இப்போது சாதித்திருக்கிறேன்— என்று பாராளுமன்றத்திற்கெதிராகப் படையெடுத்துத் தோல்வி கண்டேன்.

இன்று பாராளுமன்றத்தையும் மீறி என் ஆணை அமுலாக்கப்படுகிறது. ஆனல் அதையும் மிக ஜாக்கிரதையாக, ஜனதிபதி சுகர்ணே சந்தேகப்படாமலிருக்கும் முறையில்தான் செய்திருக்கிறேன்.

ஜனதிபதியைப் பற்றித்தான் நாடு அறியும் — சுற்றுப்பயணம் செய்த இடங்களிலெல்லாம் எப்படியெப்படியோ திரிந்திருக்கிருர்.

ஹாலிவுட் சென்றபோது நடிகை ஜோன் கிராபோர்டு என்பவரோடு சுற்றித் திரிந்திருக்கிருர். அவரை முத்தமிடும் காட்சிகூட அமெரிக்கப் பத்திரிகைகளிலே வெளியிடப்பட்டிருக்கின்றது.

இந்த நாட்டிலோ பொது இடங்களிலே முத்தமிடுவது சட்டப்படி குற்றம்—சமுதாயம் ஏற்றுக்கொள்ளாத பழக்கம்.

இதுபோன்றபடங்களை, இந்தோனேஷியப் பத்திரிகைகள் வெளியிட்டு விட்டால் ஜனதிபதியின் செல்வாக்கு நிச்சயமாகக் குறையும்.

எனவே, இந்தப் படங்களையெல்லாம் வெளியிடக்கூடாது என்று உத்தரவு பிறப்பித்திருக்கின்றேன் —ஜனதிபதிக்குக் கெட்ட பெயர் ஏற்படாமல் இருக்கவேண்டும் என்பதற்காக அல்ல—அவர் என் மீது நம்பிக்கை கொள்ளவேண்டும், அதன் மூலம் அவர் தாய்நாட்டிற்குக் திரும்பிவர நாளாகவேண்டும், அதற்கிடையே என் செல்வாக்குப் பெருகவேண்டும், கரம் வலுப்படவேண்டும், இயலுமானல் அயூப் கான் பாதையில் சென்ருகவேண்டும் என்ற எண்ணத்தில்!

என்து திட்டம் ஓரளவு பலித்து வருகிறது — ஜனதிபதியும் நாடு திரும்பக் கொஞ்ச நாள் ஆகும் என்று தெரிகிறது.

என் ஆசை நிறைவேறுவதற்கான சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது. இனி...?

ஹட்டா

இந்தோனேஷியா சுதந்திரம் பெற்றதிலிருந்து எத்தனைபோராட்டங்கள்—எத்தனை குழப்பங்கள்— எந்தெந்த இடங்களிலே கலகங்கள்! இவ்வளவுக்கும் காரணம் என்ன?

இந்த நாடு, இந்தியாவில் ஏறக்குறைய முக்கால் பங்கு பரப்பளவு உள்ளது—ஏறக்குறைய 8 கோடி மக்களைக் கொண்டது!

இந்தியாவாவது, ஒரே நிலப்பரப்பாக இருக்கின்றது—இந்தோனேஷியா தனித்தனி தீவுகளாக இருக்கின்றது. ஜாவா, சுமத்ரா, போர்னியோ செலிபஸ் ஆகிய நான்கு தீவுகள்— மதுரா, மொலுகஸ், பாலி போன்ற 15 சிறு தீவுகள்-அவற்றைவிடச்சிறிய தீவுகள் ஏறக்குறைய 1000!

இவ்வளவு தனித்தனி நிலப்பரப்பை, ஒரு குடைக்கீழ் கொண்டு வந்து ஆளுவதென்பது எப்படி இயலும்?

நாடு விடுதலை பெற்றபோது அமெரிக்க நாட்டு அரசியலமைப்பைப்போல் நாம்அரசியலை அமைத்துக்கொள்ள வேண்டும் என்று என்னுல்ஆனவரை வாதாடினேன்! என் வாதம் அன்று எடுபடவில்லை.

அதற்குப் பிறகும் உதவி ஜனதிபதியாக இருந்துகொண்டே என்னுடைய திட்டத்திற்கு என்னுல் ஆனவரை ஆதரவு திரட்டிக் கொண்டுதான் வந்தேன்.

ஆனல் அந்த முயற்சியில் எனக்கு ஏற்பட்ட மகத்தான தோல்வி...! அது என்க்குக் கிடைத்த தோல்வி என்பதைவிட, இந்த நாட்டுக்கு இழைக்கப்பட்டிருக்கிற மகத்தான கொடுமை, துரோகம், பங்கம், என்றே நான் எண்ணவேண்டியிருக்கிறது!

தனித்தனியாகப் பிரிந்து கிடக்கும் தீவுகளுக்கெல்லாம், சுய நிர்ணய உரிமை இல்லையென்ருலும், சாதாரண உரிமைகளாவது வழங்கப்[illegible]ந்தால், அப்போதைக்கப்போது அங்கங்கே ஏற்படுகின்ற புரட்சிகளைத் தவிர்த்திருக்கலாம்!

அதைச் செய்ய ஆட்சியாளர்கள் தவறிவிட்டனர் என்பது மட்டுமல்ல, நாட்டில் ஏற்படுகின்ற குழப்பங்களுக்கெல்லாம் வேடிக்கையான விளக்கங்கள் தரப்படுகின்றன.

இந்த நாட்டு மக்கள் படித்தவர்கள் அல்லவாம் — எனவே முழு ஜனநாயகம் இங்கு சரிவர இயங்காதாம்! என்ன வேடிக்கை இது!

இங்காவது 100க்கு 53 பேர் படித்திருக்கிருர்கள்— இந்தியாவில் இதில் பாதிப்பேர் கூட இல்லையே படித்தவர்கள்! அந்த நாடு ஜனநாயகத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறபோது, இந்தோனேஷியாவிலே மட்டும் அது நடைமுறைக்கொவ்வாது என்று வாதிப்பதிலே பொருளென்ன?

இப்படிப்பட்ட நொண்டி வாதங்களை, பகுத்தறிவுக்கு ஒவ்வாத கருத்துக்களைக் கூறிக்கூறி மற்றவர்களது கண்களை மறைத்து வந்த ஜனதிபதி, இப்போது தனது கண்களையே மறைத்துக் கொள்ளுகின்ற நிலை ஏற்பட்டுவிட்டது—மிக மிகப் பரிதாபத்துக்குரிய, ஆனல் பயங்கரமானதோர் கட்டம்!

முயலுக்கு மூன்று கால்கள்தான் என்று சொல்லி, அந்தக் கருத்தை எதிரிலிருப்போரெல்லாம் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றும் எதிர் பார்த்தால் என்ன பொருள்? எப்படி இயலும்?

அதைப்போலத்தான் இன்று ஜனதிபதியின் நிலை. நாட்டில் அடிக்கடி, அங்கங்கே விளைகின்ற குழப்பங்கட்கெல்லாம் அடிப்படைக் காரணத்தை மூடி மறைத்துவிட்டு, முழு ஜனநாயகம் குறைபாடுடையது, அந்தக் குறைபாடுகளால்தான் இங்ஙனம் நேரிடுகின்றது என்று விளக்கமும் தந்து — எனவே ஜனநாயகத்தைத் திருத்தியாகவேண்டும், அதனை ஒரு வழிப்படுத்தியாகவேண்டும் என்று புதியதோர் ஜனநாயக முறையைப் பாராளுமன்றத்திலே கொண்டுவந்தால் எப்படி அது ஏற்றுக்கொள்ளப்படும்?

ஜனதிபதியின் புதிய அரசியலமைப்பை—ஜனநாயகத்தைக் கட்டுப்படுத்துகின்ற திட்டத்தை— மனித உரிமையைக் குழிதோண்டிப் புதைக்கின்ற சட்டத்தை—பாராளு

மன்றம் ஏற்றுக்கொள்ளாததிலே எனக்கு மகிழ்ச்சிதான், நான் மனித உரிமையை மதிக்கின்றவன் என்பதால்!

ஆனால், ஒருவிதத்தில் வருத்தமும்கூட! உடலிலிருக்கிற நோய் தீரவேண்டுமென்றால் நோய்க்கேற்ற மருந்து தந்தாகவேண்டும்! நோயே எது என்று கண்டுபிடிக்காமல், ஏதோ ஒரு மருந்தைக் கொடுப்போம் என்று டாக்டர் கொடுத்தால்...? தவறுதான்! நோயும் குணமாகாது! உடல் கூட ஓரளவு கெடக்கூடும்! ஆயினும், உடலிலிருக்கிற நோய் தீர வேறு மருந்துதான் தந்தாக வேண்டும் என்றாவது புரிந்துவிடும் அல்லவா? அந்த முறையிலேதான் நான் சுகர்ணோவின் திட்டத்தை எடுத்துக்கொள்கிறேன். அந்தத் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்து, அது அமுலாக்கப்பட்ட பிறகும் இன்றுள்ள அதே நிலை நீடிக்குமானால், கோளாறு இன்னதென்று புரிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படுமல்லவா? அப்போதாவது என் கருத்துக்கு, அரசியல் மேதைகளின் எண்ணங்களின் அடிப்படையிலே உருவாக்கப்பட்ட திட்டத்திற்கு, தீவுகளுக்கெல்லாம் சுய நிர்ணய உரிமை தரப்பட வேண்டுமென்னும் கோரிக்கைக்கு ஆதரவு பெருகுமல்லவா?

ஆனால், மற்றொன்றையும் எண்ணிப்பார்க்கின்றேன். ஒரு கருத்துக்கும் கொள்கைக்கும் ஆதரவு பெருகவேண்டுமானால், பேச்சுரிமை எழுத்துரிமை முதலிய உரிமைகள் இருந்தால்தானே முடியும்!

இன்றோ எல்லா உரிமைகட்கும் ஏறக்குறையச் சாவுமணியே அடித்து விட்டார்கள்!

அரசியல் கட்சிகள் கூட்டங்கள் நடத்தக்கூடாதாம்—ஊர்வலங்கள் நடைபெறக்கூடாதாம் — பத்திரிகைச் செய்திகள் அனைத்தும் 'சென்சார்' செய்யப்படுமாம்! ஜனநாயகமா இது?

என் திட்டத்தை, அப்போதே ஏற்றுக்கொண்டிருந்தால் இவ்வளவு குழப்பங்கள் ஏற்பட்டிருக்க நியாயமில்லை!

உம்! அதையெல்லாம் இப்போது எண்ணிப் பலன்?

மற்றொரு அயூப் இங்கே தோன்றிவிட்டார்—இனி சர் மிர்சா நிலையில் சுகர்ணோவும் வெளிநாட்டிலே தஞ்சம் புகவேண்டி ஏற்படுமோ, என்னவோ, யார் கண்டார்கள்?

★

மேயரின் முயற்சி

—[❋]—

நாளுக்கு நாள் வளர்ந்து வரும் சென்னை நகருக்குத் தேவையான பல வசதிகளையும் செய்து தரக்கூடிய அளவுக்கு சென்னை நகராண்மைக் கழகத்தின் வருமானம் பெருகி வரவில்லை. "நகரப் போக்குவரத்துப் போன்ற சாதனங்களையாவது எங்களிடம் விட்டு, வருவாயைப் பெருக்கிக் கொள்ள வகை செய்யுங்கள்" என்று நகரசபை கேட்டால் அதற்கும் அரசாங்கம் இணங்கி வரவில்லை. இந்த நிலையில் நகரத்தின் வருமானத்தைப் பெருக்க ஒரே ஒரு வழி, வெளியூர்களிலிருந்து சென்னைக்கு வருபவர்களிடமிருந்து பிரயாண வரி வசூலிப்பதுதான்.

சில புண்ணியத் தலங்களுக்குச் செல்வோரிடம் இவ்வரி வசூலிக்கப்படுவது வழக்கத்திலிருந்து வருகிறது. மகாமகம் போன்ற திருவிழாக் காலங்களில் அவ்வூர்களுக்குச் செல்பவர்களிடமிருந்தும், அக்காலங்களில் இரயில்வே இலாகா மூலம் இம்மாதிரி பிரயாணிகள் வரி வசூலிப்பதுண்டு.

சென்னை நகரத்தையும் பல வகையில் பார்த்தால் ஒரு பிரயாணத் தலமாகச் சொல்லலாம். நாட்டின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் சென்னை நகரத்தின் சிறப்பைக்கண்டு களிக்கவும்; உல்லாசமாகப் பொழுது போக்கவும் வருவது வழக்கம். முக்கியமாக டிசம்பர், ஜனவரி மாதங்களில் இத்தகைய விருந்தினர்கள் ஆயிரக்கணக்கில் வருகிறார்கள். இவர்கள் நகரத்தின் வசதிகளை வளர்க்க இரயில்வே கட்டணத்துடன் ஒரு சிறு தொகையைக் கொடுக்கத் தயங்கப்போவதில்லை.

புது மேயர் பதவியேற்றவுடன் இந்தப் பிரயாணிகள் வரி விஷயத்தில் அதிக அக்கறை எடுத்து வருவதை வரவேற்கிறோம். மத்திய இரயில்வே மந்திரியை அவர் பேட்டி கண்டு இவ்விஷயத்தை வற்புறுத்திப் பேசியதாகத் தெரிகிறது.

டிசம்பர் 15-ந் தேதி முதல் பிப்ரவரி 5-ந் தேதி வரை இந்தப் பிரயாணிகள் வரி விதிக்க அனுமதிக்கலாம் என்று சென்னை அரசாங்கமும் மத்திய சர்க்காருக்குச் சிபாரிசு செய்திருக்கிறதாம். இதை ஆண்டு முழுதுக்குமே அனுமதிக்க வேண்டுமென்று நகர சபை கோருவதில் நியாயம் இருக்கிறது. அப்போதுதான் நகர சபைக்குப் போதிய அளவு வருமானம் கிடைத்து, வரியின் நோக்கமும் நிறைவேற முடியும். ஆகவே இரு அரசாங்கங்களும் நகர சபையின் கோரிக்கையை ஏற்று உடனே அதை அமுலாக்க வழி செய்யவேண்டும்.

—"ஆனந்த விகடன்"